**BHARATHIAR UNIVERSITY, COIMBATORE-641 046.**
**UNDER GRADUATE DEGREE PROGRAMMES ( CBCS Semester Pattern )**
**(For the students admitted during the academic year 2017 -2018 onwards)**

**பாடத்திட்டம் - முதற்பருவம் - பகுதி - I - தாள் - I**
**(2017-2018ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)**
**(செய்யுள், சிறுகதை, இலக்கிய வரலாறு, இலக்கணம், மொழிபெயர்ப்பு)**

**அலகு - I**

1. பாரதியார் - புதுமைப் பெண்
2. பாரதிதாசன் - அழகின் சிரிப்பு - தமிழ்
3. கண்ணதாசன் - காலக்கணிதம்
4. சுரதா - சிக்கனம்
5. காசி ஆனந்தன் - பெருமூச்சு
6. இன்குலாப் - மனுசங்கடா நாங்க மனுசங்கடா

**அலகு - II**

7. அப்துல் ரகுமான் - ஒப்பில்லாத சமுதாயம்
8. அறிவுமதி - நட்புக்காலம்
9. நா.முத்துக்குமார் - அக்காவின் கடிதம்
10. தாமரை - ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்
11. ஈரோடு தமிழன்பன் - ஹைகூக் கவிதைகள் (10 கவிதைகள்)
12. நாட்டுப்புறப் பாடல்கள் - தெம்மாங்கு பாடல், தொழில் பாடல்

**அலகு - III**

- புதுமைப்பித்தன் முதல் இறையன்பு வரை -சிறுகதைத் தொகுப்பு -NCBH,வெளியீடு.

**அலகு - IV - இலக்கிய வரலாறு**

- புதுக்கவிதை, ஹைகூக் கவிதை - தோற்றமும் வளர்ச்சியும்
- படிமம், குறியீடுகள் - பற்றிய விளக்கங்கள்.
- சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்.

**இலக்கணம் :**

1. மொழித்திறன், சொற்பொருள் வேறுபாடு, ர,ற,ல,ள,ழ,ந,ண,ன வேறுபடுத்தி அறியும் முறை.
2. தொடரில் வழூஉச் சொற்களை நீக்கி எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல்
3. உண்டு, உள, உளது, அன்று, அல்ல, அல்லன், அல்லர் பயன்பாடு ஓர், ஒரு பயன்பாடு
4. ஒருமை, பன்மை தொடரில் அமையும் விதம்.

**அலகு - V - மொழிபெயர்ப்புப் பகுதி**

பொதுப்பகுதி, அலுவலகப் பகுதி, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தல்.

---

**முதற் பருவம் - பகுதி I - தாள்-I**

**வினாத்தாள் அமையும் முறை**

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 75**

**பிரிவு - அ** **10X1=10**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

ஒரு சொல் / தொடரில் விடை தருக.

(நான்கு அலகுகளிலிருந்து கேட்கப்பட வேண்டும்)

**பிரிவு - ஆ** **5 X5=25**

செய்யுள் - 3 வினாக்கள்

சிறுகதை - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

**பிரிவு - இ** **5X8=40**

செய்யுள் - 2 வினாக்கள்

சிறுகதை - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

பயிற்சிக்குரியன - 1 வினா (ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்)

(ஐந்து அலகுகளிலிருந்தும் வினாக்கள் அமையும்)

குறிப்பு : ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் இது அல்லது அது என்ற வகையில், அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல் வேண்டும்.

-------

## 1.புதுமைப்பெண்

**பாரதியார்**

சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு திசம்பர் 11,1882இல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்றே அழைக்கப்பட்டார். பாரதி ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாளர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரைப் ‘பாரதியார்’ என்றும், ‘மகாகவி’ என்றும் அழைக்கின்றனர்.

பாரதி, தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனைப் போற்றி, ‘பாரதி’ என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் படைப்புகள் தமிழ்நாடு அரசினால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

1. போற்றி போற்றியோ ராயிரம் போற்றி! நின்
பொன்ன டிக்குப்பல் லாயிரம் போற்றி காண்!
சேற்றி லேபுதி தாகமு ளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே
துன்ப நீக்குஞ் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழி நீ!
2. மாதர்க் குண்டு சுதந்திர மென்றுநின்

வண்ம லர்த்திரு வாயின்மொ ழிந்தசொல்
நாதந் தானது நாரதன் வீணையோ?
நம்பிரான் கண்ணன் வேய்ங்குழ லின்பமோ?
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச் சொல்வதோ?
சாதல் மூத்தல் கெடுக்கு மழிழ்தமோ?
தையல் வாழ்கபல் லாண்டுபல் லாண்டிங்கே!

3. அறிவுகொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினு மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடி மைச்சுருள்
தீயி லிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ!

4. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ!

5. நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டு மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சால வேயரி தாவதொர் செய்தியாம்
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்து மறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புகள் கேட்டிரோ!

6. புதுமைப் பெண்ணிவள் சொற்களுஞ் செய்கையும்
பொய்மை கண்ட கலிக்குப் புதிதன்றிச்
சதுமறைப்படி மாந்த ரிருந்த நாள்
தன்னி லேபொது வான வழக்கமாம்
மதுரத் தேமொழி மங்கைய ருண்மைதேர்
மாத வப்பெரி யோருட னொப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய

முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்.

7. நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!

8. உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார்தங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பராம்.

9. சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச்ச மைப்பராம்
ஏத்தி யாண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையி னெண்ணங்கள் கேட்டிரோ!

10. போற்றி, போற்றி, ஜய ஜய போற்றியிப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து,
மனிதர் தம்மை யமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல்
லருளி னாலொரு கன்னிகை யாகியே
தேற்றி யுண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம்யாவினு மேற்செல்வ மெய்தினோம்.

----------

**2.அழகின் சிரிப்பு - தமிழ்**

**பாரதிதாசன்**

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் 29.04.1891இல் புதுவையில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தார். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். எழுச்சி மிக்க தம் எழுத்தால் 'புரட்சிக் கவிஞா்' என்றும் 'பாவேந்தா்' என்றும் அழைக்கப்படுபவா். இவா் 'குயில்' என்னும் பெயரில் திங்களிதழ் ஒன்றை நடத்தி வந்தார்.

தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராக விளங்கியதுடன் திராவிட இயக்கத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதன் காரணமாக கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிா்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்தார். அறிஞா் அண்ணா அவா்களால் 'புரட்சிக்கவி' என்று பாராட்டப்பட்டு ரூ.25,000 வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். கவிஞருடைய படைப்பான 'பிசிராந்தையார்' என்ற நாடக நூலுக்கு 1969இல் சாகித்திய அகாடமியின் விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினால் 1990இல் பொது உடைமையாக்கப்பட்டன. பாரதிதாசன் 21.04.1964 அன்று காலமானார்.

**1.முதலில் உண்டானது தமிழ்**

புனல் சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே 'புதிய நாளை'
மனிதப்பைங் கூழ்மு ளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற் றமிழே நீதான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின் வாழ்வாய் மலா்ந்த தன்றோ?

**2.இசை, கூத்தின் முளை**

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு, வண்டு,
தழைமூங்கில் இசைத்ததைத், தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும்இசைத் தமிழே! இன்பம்
எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே! என் வியப்பின் வைப்பே!

**3.இயற்றமிழ் எழில்**

அம்மாஎன் றழைத்தல், காகா
எனச் சொல்லல், அஃகென் றொன்றைச்
செம்மையிற் சுட்டல் என்னும்
இயற்கையின் செறிவி னாலே
இம்மா நிலத்தை ஆண்ட
இயற்றமி ழேஎன் அன்பே !
சும்மாதான் சொன்னார் உன்னை
ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே

**4.தமிழா்க்குத் தமிழ், உயிர்**

வளா்பிறை போல் வளா்ந்த

தமிழரில் அறிஞர் தங்கள்,
உளத்தையும், உலகில் ஆர்ந்த
வளத்தையும் எழுத்துச் சொல்லால்
விளக்கிடும் இயல்மு திர்ந்தும்,
வீறுகொள் இசை யடைந்தும்,
அளப்பிலா உவகை ஆடற்
றமிழேநீ என்றன் ஆவி!

**5.சாகாத்தமிழ்**

படுப்பினும் படாது, தீயர்
பன்னாரும் முன்னேற் றத்தைத்
தடுப்பினும், தமிழர் தங்கள்
தலைமுறை தலைமு றைவந்
தடுக்கின்ற தமிழே! பின்னர்
அகத்தியர் காப்பி யர்கள்
கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்
கிளைதொத்தும் கிளியே வாழி!

**6.கலைகள் தந்த தமிழ்**

இசையினைக் காணு கின்றேன்
எண்நுட்பம் காணு கின்றேன்
அசைக்கொணாக் கல்தச் சர்கள்
ஆக்கிய பொருள்காண் கின்றேன்
பசைப்பொருட் பாடல் ஆடல்
பார்க்கின்றேன், ஓவியங்கள்,
நசையுள்ள மருந்து வன்மை
பலபல நான்காண் கின்றேன்.

**7.முன்னூலில் அயலார் நஞ்சம்**

பன்னூறு நூற்றாண் டாகப்
பழந்தமிழ் மலையின் ஊற்றாய்
மன்னரின் காப்பி னாலே,
வழிவழி வழாது வந்த
அன்னவை காணு கின்றேன்
ஆயினும் அவற்றைத் தந்த
முன்னூலை, அயலான், நஞ்சால்
முறித்ததும் காணு கின்றேன்.

**8.பகைக்கஞ்சாத் தமிழ்**

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப் பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செய்நி னைத்த
எதிரியை, அந்நாள் தொட்டே
'அடக்கடா' என்று ரைத்த
அறங்காக்கும் தமிழே, இங்குத்

தடைக்கற்கள் உண்டென் றாலும்
தடந்தோளுண் டெனச் சிரித்தாய்!

**9.வெற்றித் தமிழ்**

ஆளுவோர்க் காட்பட் டேனும்
அரசியல் தலைமை கொள்ள
நாளுமே முயன்றார் தீயோர்
தமிழே நீ நடுங்க வில்லை!
“வாளினை எடுங்கள் சாதி
மதம்இல்லை! தமிழர் பெற்ற
காளைகாள்” என்றாய், காதில்
கடல்முழக் கத்தைக் கேட்டாய்!

**10.படைத்தமிழ்**

இருளினை வறுமை நோயை
இடறுவேன் என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே உதிர்ப்பேன் நீயோ
கருமான்செய் படையின் வீடு!
நான் அங்கோர் மறவன்! கன்னற்
பொருள்தரும் தமிழே நீ ஓர்
பூக்காடு : நானோர் தும்பி!

## 3.காலக் கணிதம்

**கண்ணதாசன்**

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சிறுகூடற்பட்டியில் தோன்றிய பாட்டுப்பறவை. பட்டி தொட்டிகளில் எல்லாம் தமது திரையிசைப் பாடல்களால் புகழ்ப் பூத்த கவிஞர். பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்ச்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே எடுத்தாண்டவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.

சாத்தப்பன்-விசாலாட்சி என்பாருக்கு மகனாக 24.06.1927-இல் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் முத்தையா. கவிதைத் தொகுப்புகள், திரைப்பாடல் தொகுப்புகள், மாங்கனி போன்ற காவியங்கள், உரை வீச்சாக புஷ்பமாலிகா போன்ற படைப்புகள், அர்த்தமுள்ள இந்துமதம் போன்ற தத்துவ விளக்க நூல்கள், நாவல்கள் எனப் பன்முகப் படைப்புகளைத் தந்தவர் கண்ணதாசன். ‘காலக் கணிதம்’ என்னும் கவிதை சுயதரிசனமாகக் கண்ணதாசன் தன்னை பற்றியே கவிதை ஆக்கியிருப்பினும் சிறந்த கவிஞர்களுக்கு அதுவே இலக்கணமாகிறது.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவை சரியென்றால் இயம்புவதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை, அறிக!

செல்வர் தம் கையில் சிறைப்பட மாட்டேன்
பதவி வாளுக்குப் பயப்பட மாட்டேன்
பாசம் மிகுத்தேன், பற்றுதல் மிகுத்தேன்
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்
இல்லா யின் எவர் இல்லந் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டே கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தன சில சொல்லிட முனைவேன்
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது!
வளமார் கவிகள் வாக்கு மூலங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்க யான் வனவிலங் கல்ல!
மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர், தர்பார் மாறும்,
தத்துவம் மட்டுமே அட்சயப் பாத்திரம்
கொள்வோர் கொள்க! குரைப்போர் குரைக்க!
உள் வாய் வார்த்தை உடம்பு தொடாது!
நானே தொடக்கம் நானே முடிவு!
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

-------------

## 4.சிக்கனம்

**சுரதா**

கவிஞர் சுரதா பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக் கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூர்(சிக்கல்) என்னும் ஊரில் 1921-இல் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-சண்பகம் அம்மையார் ஆவர். பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார். சுரதாவின் ‘சொல்லடா’ என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த ‘பொன்னி’ என்னும் இதழ் 1947 ஏப்ரல் மாத இதழில் வெளியிட்டு, இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது. இங்கு சிக்கனம் தேவை இக்கணம் என்பதை வலியுறுத்துகிறார் சுரதா.

1. உரைநடையின் சிக்கனந்தான் கவிதை ஓங்கும்
உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம் காதல்

வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம்
மாளிகையின் சிக்கனந்தான் குடிசை யாகும்
உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம்
உணவுகளின் சிக்கனந்தான் பங்கீ டாகும்.
அரசியலின் சிக்கனந்தான் இரண்டே கட்சி
அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூற்கள்.

2. எப்படியும் வாழ்வதுதான் வாழ்க்கை என்றே
எண்ணுபவன் பொறுப்பற்ற மனித னாவான்.
இப்படித்தான் நாம்வாழ வேண்டு மென்றே
எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்தோ னாவான்.
உப்பாக இருந்தாலும், நீரா னாலும்,
உபயோகப் படுத்துவதில் அளவு வேண்டும்.
அப்படிநாம் அளவறிந்து பயன் படுத்தும்
அதன்பெயரே சிக்கனமாம் அறிந்து கொள்வீர்.

3. ஆவிக்கு வேண்டுமெனில் அங்கம் வேண்டும்
அன்புக்கு வேண்டுமெனில் உள்ளம் வேண்டும்
பூவுக்கு வேண்டுமெனில் வாசம் வேண்டும்
புனலுக்கு வேண்டுமெனில் ஓட்டம் வேண்டும்
சேவிக்க வேண்டுமெனில் பக்தி வேண்டும்
சேமிக்க வேண்டுமெனில் புத்தி வேண்டும்
சேவிக்க பக்தியெனில், பொருளைப் போற்றிச்
சிறப்படையச் சிக்கனந்தான் முதலில் வேண்டும்.

4. உருண்டோடிக் கொண்டிருக்கும் கூழாங் கல்லில்
ஒருபோதும் பாசிவந்து படிவ தில்லை.
வரவுக்குத் தக்கபடி செலவு செய்து
வருவோரைத் துன்பங்கள் தொடுவ தில்லை
சிரமங்கள் பெரும்பாலும் குறைய வேண்டின்
சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும். வாழ்வில்
பரபரப்பாய், மினுமினுப்பாய் வாழ் தலால
பயனில்லை நாட்டுக்கும் நன்மை இல்லை.

5. பேரோடும் புகழோடும் வாழ்வ தற்குப்
பேரறிவே துணைபுரியும் நாமெல் லோரும்
சீரோடும் சிறப்போடும் வாழ்வ தற்குச்
சிக்கனமே துணைபுரியும், பகட்டு வாழ்க்கை
நீராவி போன்றதுவாம் சிக்க னந்தான்
நீருற்றைப் போன்றதுவாம் சிக்கனத்தை
வேரொடு பெயர்த்தெறிந்து வறுமை யுற்று
விக்கி விக்கி அழுதவர்கள் பலபே ருண்டு.

6. சிக்கனமாய் வாழாமல் மிகுதியாகச்
செலவழித்துக் கவிகம்ப தாசன் கெட்டான்.
பக்குவமாய் வாழ்ந்தாலும் கடைசி நாளில்

பாகவதர் வறுமையுற்று வாட லானார்.
முக்கியமாய் இவர்களெல்லாம் சிக்க னத்தை
முறையாகப் பின்பற்ற மறந்த தாலே
இக்கதிக்கிங் காளானார். இல்லையென்றால்
ஏனிவர்கள் வறுமையுற்று வாட வேண்டும்?.

7. தாராள மனப்பான்மை என்று சொல்லித்
தண்ணீர்போல் பணத்தையெலாம் செலவுசெய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம். வாழ்வில்
சிக்கனந்தான் ஒருவனுக்குச் சிறந்த சொத்தாம்.
சீராகச் செட்டாக ஒவ்வொர் நாளும்
சிக்கனமாய்ப் பெரியார்போல் வாழ்ந்து வந்தால்
பாராங்கல் மீதில்விழும் மழைநீர் போலப்
பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும்.

## 5.பெருமூச்சு

**காசி ஆனந்தன்**

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் 1938இல் இலங்கை, மட்டக்களப்பில் பிறந்தவர். இயற்பெயர், காத்தமுத்து சிவானந்தன். ஈழத்து எழுச்சிக் கவிஞர். இளைஞனாக இருந்த காலத்திலேயே சிங்கள ஆதிக்க வெறியர்களின் - ஆட்சியாளர்களின் அடக்குமுறை மற்றும் ஆட்சி நடைமுறைகளுக்கு எதிராகப் போராட்டம் செய்தவர். மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டம் செய்து சிறை சென்றவர். வாகன இலக்கத் தகடுகளிலேயே சிங்கள எழுத்துக்கள் இருக்கக் கூடாது என்று அவற்றை அகற்றும் போராட்டத்திலும் பாடசாலை பெயர்ப் பலகைகளில் சிங்கள மொழி இருக்கக் கூடாது என்றும் போராட்டம் செய்து காவலர்களால் கைதாகி சிறை வாசம் அனுபவித்தவர்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழிலக்கியம் பயிலும்போது பெரியாருடன் இணைந்து செயல்பட்டார். 1963இல் இலங்கை சென்றவர் அங்கு அரசு மொழித்திணைக் களத்தில் மொழிப்பெயர்ப்பாளராகச் சேர்ந்தார். 1972-இல் இலங்கை குடியரசாக மாறியபோது அதன் தமிழ் எதிர்ப்புக் கொள்கையோடு ஒத்து வராததால் அரசுப் பணியிலிருந்து விலகி ஈழத்தமிழர்களின் எழுச்சிக்குத் துணை நின்றார். காசி ஆனந்தன் உயிர் தமிழுக்கு, தமிழன் கனவு, தெருப்புலவர் சுவர்க்கவிகள் உட்பட பல கவிதை நூல்களைத் தந்துள்ளார். தமிழனின் வீரம், தன்மான உணர்வு குன்றிப் போவதா? என்ற கேள்விதான் இக்கவிதை.

வலிபடைத்து முறமெடுத்துப்
புலியடித்த தமிழகம்
கிலிபிடித்த நிலைபடைத்து
வெலவெலத்து வாழ்வதோ?

பகையொ துங்கப் பறைமுழங்கிப்
புகழடைந்த தமிழகம்
கதிகலங்கி விழி பிதுங்கி
நடுநடுங்கி வாழ்வதோ?

படைநடத்தி மலைமுகத்தில்
கொடிபொறித்த தமிழகம்
துடிதுடித்து அடிபிடித்து
குடிகெடுத்து வாழ்வதோ?

கடல் கடந்த நிலமடைந்து
கதையளந்த தமிழகம்
உடல் வளைந்து நிலை தளர்ந்து
ஒளியிழந்து வாழ்வதோ?
மகனிறக்க முலையறுக்க
முடிவெடுத்த தமிழகம்
புகழிறக்க மொழியிறக்க
வெளிநகைக்க வாழ்வதோ?

----------------------

**6.மனுசங்கடா நாங்க மனுசங்கடா**

**இன்குலாப்**

இன்குலாப்பின் இயற்பெயர் எஸ்.கே.எஸ்.சாகுல் அமீது. கீழக்கரை என்னும் ஊரில் இசுலாமியச் சமூகத்தில் மிகவும் ஏழ்மை குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப் படிப்பைக் கீழக்கரையில் முடித்துவிட்டு சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில் புதுமுக வகுப்பிலும் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் இளங்கலை தமிழ் வகுப்பிலும் சேர்ந்து பயின்றார். படிப்பை முடித்து சென்னையில் புதுக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

சமூகச் சிக்கல்கள், ஒடுக்குமுறைகள், போராட்டங்கள் ஆகியவற்றை மையப்படுத்தியே இவருடைய படைப்புகள் அமைந்திருந்தன. இன்குலாப் என்பதற்குப் ‘புரட்சி’ என்று பொருள்படும்.

தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை எனப் பல இதழ்களில் ஏராளமான கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். சூரியனைச் சுமப்பவர்கள் என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். ‘மனுசங்கடா, நாங்க மனுசங்கடா’ என்னும் இவர் எழுதிய பாட்டு எண்ணற்ற மேடைகளில் தலித்து மக்களால் பாடப்படுகிறது. கல்லூரிக் காலத்திலேயே குரல்கள், துடி, மீட்சி என்ற மூன்று நாடகங்கள் எழுதினார். பிற்காலத்தில் அவ்வை, மணிமேகலை ஆகிய நாடகங்கள் இவரால் எழுதப்பட்டன. 2007ஆம் ஆண்டு வரை இன்குலாப் எழுதிய கவிதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு ‘ஒவ்வொரு புல்லையும்’ என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மனிதர்களின் குரலாக ஓங்கி ஒலிக்கிறது இக்கவிதை.

மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

எங்களோட மானம் என்ன தெருவில் கிடக்கா - உங்க
இழுப்புக்கெல்லாம் பணியுறதே எங்களின் கணக்கா
உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா
நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா

உங்க தலைவர் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும்
உங்க ஊர்வலத்துல தர்ம அடிய வாங்கிக் கட்டவும் - அட
எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும் - நாங்க
இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்

குளப்பாடி கிணத்து தண்ணி புள்ளய சுட்டது
தண்ணியும் தீயாச் சுட்டது - இந்த
ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது
சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது - உங்க
சர்க்காரும் கோர்ட்டும் அதுல எண்ணய ஊத்துது

எதை எதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்களே நாங்க
எரியும்போது எவன் மசுரப் புடுங்கப் போனீங்க - டேய்

மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

--------------------------

## 7.ஒப்பிலாத சமுதாயம்

**அப்துல் ரகுமான்**

அப்துல் ரகுமான், மதுரையில் 1937-இல் உருதுக் கவிஞர் மஹி என்னும் சையத் அஹமத் -பேகம் இணையருக்கு மகனாகப் பிறந்தார். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படும் இவர், ‘வானம்பாடி’ இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். ‘பால்வீதி’ என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். அத்தொகுதி வெளிவந்த போது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக் கொண்டார்.

தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். 1960க்கு பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

அறிவுமதி உள்ளிட்ட இளந்தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கினார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றவர். பால்வீதி, சுட்டுவிரல், நேயர் விருப்பம், பித்தன், தீபங்கள் எரியட்டும் போன்றவை இவரது சிறந்த படைப்புகளாகும். அவர் கனவு காணும் நல்லதொரு சமுதாயம் குறித்து இக்கவிதை பேசுகிறது.

தனித்திருந்தவன்
பசித்திருந்தவன்
விழித்திருந்து கண்ட கனா!

இவ்வுலகில் வாய்க்காது
என்று சில சமயங்கள்
அவ்வுலகில் கற்பித்து
அமைந்திருக்கும் கற்பனை.

பொருளியல் அறிஞர்கள்
புத்தகத்தில் காட்டும்
பூலோக சொர்க்கம்
அரசியல்வாதிகளின்
அலுக்காத வாக்குறுதி.
திட்ட ஆண்டிகள்
கட்ட முயலும் மடம்
பாட்டுப் புலவர்க்கோ
நாட்டு நகர்ப்படலம்.

வறுமையெனும் பாலையிலே
வாடுகின்ற மான்களுக்கோ
கண்களை ஏமாற்றும்
கானல் நீர்.
எப்படிக் கூடுவது
என்பதிலே பேதங்கள்
எப்படி வாழ்வது
என்பதிலே குத்துவெட்டு
பயணத்தில் சம்மதம்
பாதையிலே தகராறு

ஒரு சிலர்க்கோ இது
ஆண்டவன் தர வேண்டும்
ஒரு சிலர்க்கோ இது
ஆயுதத்தால் வரவேண்டும்.

‘சமயலறைதான் வீடு’
இது சிலரின் வேதம்
‘படுக்கையறைதான் வீடு’
இது சிலரின் வாதம்.

நல்லதொரு சமுதாயம்
நாம் காண வேண்டும்
அதற்காக
எட்டமுடியாத
இலட்சியங்கள் தேவையில்லை.

அடைய முடியாத
ஆகாயக் கோட்டை ஏன்?
எட்ட முடிகின்ற
யதார்த்தக் குடில் போதும்.

அந்தச் சமுதாயத்தில்
ஆறாக வீதியிலே
பாலும் தெளிதேனும்
பாய்ந்தோட வேண்டாம்
இரத்தம் ஓடாது
இருந்தால் அது போதும்.

அங்கே -

எழுத்துக்குத் தடையிருக்கும்
இழிந்த தலை எழுத்துக்கு.

பேச்சுக்குத் தடையிருக்கும்
பெருந்திண்ணைப் பேச்சுக்கு.

பத்திரிகைத் தணிக்கையுண்டு
பச்சைக்கும் மஞ்சளுக்கும்.

பொதுக்கூட்டத் தடையுண்டு
பருவஆண் பெண்ணுக்கு

கண்டகண்ட இடத்தில்
கட்சிக்கொடியேற்றக்
கட்டாயம் தடையுண்டு!
உடைக்குப் பயன்படாது
ஊதாரித் தனமாகத்
துணிச் செலவு ஆவதனால்!

அங்கே

பதுக்கலுக்கு நிச்சயம்
பாராட்டுக் கிடைக்கும்
பாட்டில் நயங்களைப்
பதுக்கி வைப்பதற்கு!
கள்ளக் கடத்தலுண்டு
காதற்கண் நடத்துகின்ற
உள்ளக் கடத்தலது.

கலப்படம் செய்பவர்க்குக்
கைநிறையப் பரிசுண்டு
கல்யாணத்தால் சாதிக்
கலப்படத்தைச் செய்பவர்க்கு!

கறுப்புப் பணத்திற்குக்
கவுரவம் உண்டங்கே
உழைப்பவர் அழுக்குக்
கைகளிலே புரள்வதனால்!

சாதிகள் இருக்குமங்கே
சரித்திரத்தின் ஏடுகளில்
போர்ப்படைகள் இருக்கும்!
பொருட்காட்சிச் சாலைகளில்!

சமுதாய ஒழுங்குக்குச்
சட்டங்கள் இருக்குமங்கே

இடியாக அல்ல
இனிய மழையாக!

நீதிமன்றம் இருக்குமங்கே
நீதியை விற்கும்
சந்தையாக அல்ல
சத்தியத்தின் நிழலாக!
அங்கே
விசாரிக்கப் படுவன
குற்றங்களல்ல
குற்றத்தின் காரணங்கள்.

கைவிலங்கு மட்டுமல்ல
கையுறையும் அங்கிருக்கும்
நல்லவை செய்வோரை
நாடிக் கொடுப்பதற்கு
சிறைகளும் அங்குண்டு
செல்லும் புழுக்களை
வண்ணத்துப் பூச்சியாய்
மாற்றி அனுப்புதற்கு!

அங்கே

காவலா் கைகளிலே
தீவட்டி இருக்காது
தீபங்கள் இருக்கும்

அங்கே

கட்சிநாயகம் அல்ல
ஜனநாயகம் நடக்கும்

அங்கே

வாக்குப் பெட்டிகளைச்
செயற்கை முறையால்
சினையாக்க முடியாது
கருச்சிதைவு செய்யும்
காரியமும் நடக்காது

அதன் வயிற்றிற்கு
அவதாரம் சூல்கொள்ளும்
ஆற்றலிருப் பதுபோன்றே
ஆணவ அசுரா்களை

அள்ளி விழுங்குகின்ற
ஆவேசமும் இருக்கும் !

வாக்குகள்
எண்ணப்படமாட்டா
எடைபோடப்படும் அங்கே!

குடியானவன் வீட்டுக்
கோழி முட்டையை
அதிகாரி வீட்டு
அம்மி அடைக்காக்கும்!
அங்கே -

இதயத்தை ஏமாற்றி
இரக்கத்தைக் கறப்பதற்கு
வைக்கோல் கன்றுகள்
வைப்பவர்க்குச் சிறை உண்டு.

இலட்சிய வீடு
எதுவென்றால், மக்கிய
முதுமக்கட் தாழிகளை
முன்கொணர்ந்து வைக்கின்ற
பத்தாம் பசலிக்
பண்டிதர்க்கங் கிடமில்லை

வாய்க்கோயில் பசியால்
வனப்பிழந்து கிடக்க, அங்கே
வசிக்கின்ற மொழிக்கு
வழிபாடு நடக்காது

ஆசிரியர், சுரைக்காயின்
சித்திரத்தை யல்ல
வித்தை வழங்குவார்

இறுதியிலே
பட்டம் அளிக்கும்
பயன்படா விழா அல்ல
வேலை அளிக்கும்
விழா நடக்கும்

அங்கே

திருமணங்கள் சொர்க்கத்தில்

நிச்சியிக்கப் படமாட்டா
திருமணங்கள் சொர்க்கத்தை
நிச்சயிக்கும்

அங்கே

மணம் என்றால் பணம் கேட்கும்
ஆண்விப சாரத்தை
பிரம்மச் சரியத்தால்
தண்டிக்கும் நீதியுண்டு!

தாலிக் கயிறு ஒரு
ஆயுள் தண்டனையின்
கழுத்து விலங்காகாது!
திரவப் பெண்மைக்குத்
திடப்பொருள் கிண்ணமாய்
ஆண்மை இருக்குமங்கே!

ஆண்மையுடன் போட்டியிடும்
ஆவேசத்தில் அங்கே
மெல்லிய பெண்மை
மீசை வளர்க்காது

பெருமைக் குரிய
பெண்மை அங்குப்
போற்றப் படுமன்றிப்
பூஜிக்கப் படாது!

அங்கே

பிரமனுக்குக் கட்டாய
ஓய்வுதரப் படாது!
ஆனால்
வேண்டிய அளவுக்கு
விடுமுறைகள் தரப்படும்

அங்கே

சமயங்களெல்லாம்
தைக்கின்ற நூலாகும்
கத்தரிக் கோல்களின்
காரியத்தைச் செய்யா

பக்குவ வேதப்

பக்கங்களிலிருந்து
மதவாதிகள் அல்லர்
மனிதர்கள் மலர்வார்கள்

பணமகளுக் கங்கே
பதிவிரதைத் தன்மை
பாவமென ஆகும்
பரத்தமையே அவளுக்குப்
பாராட்டும் கற்பாகும்.

பதிவுத் திருமணம்
பண்ணிவிட்டதாலேயே
பூமிப் பெண்ணுக் கொருவன்
புருஷனாக முடியாது.

வியர்வைத் துளிகளைப்
பரிசமாய்த் தருவோர்க்கே
மண் மகள் மனையாவாள்

அனைவரும் ஓர்நிறை
அல்ல
உழைக்கும் சாதியே
உயர்ந்த சாதி
அங்கே
வயிறு மட்டுமல்ல
மனமும் நிறைந்திருக்கும்

சுதந்திரம் அங்கே
சுவாசமாய் இருக்கும்
பிறர்தர வாங்கும் பிச்சையாய் இராது

கடமை அங்கே கவுரவம்
உரிமை அங்கே ஊதியம்
சத்தியம் அங்கே சமயம்
இதயம் அங்கே முகவரி
புன்னகை அங்கே பொதுமொழி.

-----------

## 8.நட்புக் காலம்

**அறிவுமதி**

அறிவுமதி, புகழ் பெற்ற தமிழ்க் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். அறிவுமதியின் இயற்பெயர் ‘மதியழகன்’. தனது நண்பர் ‘அறிவழகன்’ பெயரையும், தனது பெயரையும் சேர்த்து ‘அறிவுமதி’ என்று வைத்துக் கொண்டார். இவர் விருத்தாசலம் நகருக்கு அருகில் உள்ள சு.கீணனூரில் பிறந்தவர். அவிழரும்பு, என் பிரிய வசந்தமே, நட்புக்காலம் உள்ளிட்ட 13 கவிதைத் தொகுப்புகளையும்

'வெள்ளைத் தீ' என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார். 'நீலம்' என்ற குறும்படத்தினைத் தயாரித்து இயக்கியதுடன் அதில் நடித்தும் உள்ளார். அறிவுமதியின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்று நட்புக்காலம். இந்த நூல் ஆண் பெண் நட்பை வைத்து எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாகும்.

உன்
பிறந்த நாளுக்கான
வாழ்த்து அட்டைகளில்
நல்ல
வாசகம்
தேடித் தேடி
ஏமாந்த சலிப்பில்
தொடங்கிற்று
உனக்கான
என்
கவிதை.

நீ என்னிடம்
பேசியதை விட
எனக்காகப்
பேசியதில்தான்
உணர்ந்தேன்
நமக்கான
நட்பை….

அடிவானத்தை மீறிய
உலகின் அழகு என்பது
பயங்களற்ற
இரண்டு மிகச்சிறிய
இதயங்களின்
நட்பில்
இருக்கிறது.
நீ வயசுக்கு வந்தபோது
தடுமாறிய
என்
முதல் கூச்சத்திற்குக்
குட்டு வைத்து
நம் நட்பைக்
காப்பாற்றியவள்
நீ.
உன்னுடன்
சேர்ந்து நடக்க

ஆரம்பித்த
பிறகுதான்
சாலை ஓர
மரங்களிலிருந்து
உதிரும்
பூக்களின் மௌனத்திலும் நான்
இசை
கேட்க
ஆரம்பித்தேன்..

பள்ளி மைதானம்
காலை
வணக்கம்
காற்று கலைத்ததைத்
கண்களால்
மூடினேன்

இதயம் சேகரித்துக்
கொண்டிருந்த
வானத்தில்
நீ
பறக்கத் துடிக்கையில் அசைந்த
புற்களின்
நடுவேதான்
அமர்ந்திருந்தது
நம் நட்பின்
முதல்
நாள்…

## 9.அக்காவின் கடிதம்

**நா.முத்துக்குமார்**

நா.முத்துக்குமார் காஞ்சிபுரம் மாவட்டம், கன்னிகாபுரத்தில் பிறந்தவர். தமிழ் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். பல்லேலக்கா, என் காதல் சொல்ல, ஒரு கல் கண்ணாடி ஆகியவை இவரின் பாடல்களுள் சில. தங்க மீன்கள், சைவம் திரைப்படப் பாடல்களுக்காக தேசிய விருது வாங்கியவர்.

நான்கு வயதில் தாயை இழந்த இவர் சிறுவயதில் இருந்தே புத்தகங்களை உலகமாகக் கொண்டார். தொடக்கத்தில் இயக்குநராகப் பணியாற்ற விரும்பி இயக்குனர் பாலுமகேந்திராவிடம் நான்கு ஆண்டுகள் பணி செய்தார். இயக்குநர் சீமானின் வீரநடை என்ற படத்தில் பாடல் எழுதினார். கிரீடம் (2007), வாரணம் ஆயிரம் (2008) போன்ற படங்களுக்கு வசனமும் எழுதியுள்ளார். இதுவரை 1500 பாடல்களுக்கு மேல் எழுதியுள்ள இவர். 2016 வரை தமிழ்த் திரையுலகின் முன்னணி பாடலாசிரியராக இருந்தார். ‘பட்டாம்பூச்சி பதிப்பகம்’ என்ற பெயரில் பதிப்பகம் தொடங்கி நடத்தினார். உடல் நலக்குறைவால் 2016ஆகஸ்ட் 14ஆம் நாள் தனது 41வது வயதில் காலமானார். ஒரு கிராமத்துப்

பெண்ணின் நகர வாழ்க்கை பிறந்த மண்ணிலிருந்து அறுபட்டு நிற்கும் தொப்புக்கொடி உறவு - இவைகளுக்கிடையிலான அகமனப் போராட்டங்களை அடையாளப்படுத்துகிறது இக்கவிதை.

அப்பவும்
என் மனது
நம் வீட்டைச் சுற்றியே
வளைய வருகிறது.

அம்மா
நீ கொடுத்தனுப்பிய
காய்ந்த வேப்பம் பூக்கள்
ரசத்தில் மிதக்கும் போதெல்லாம்
உன் முகம்
வந்து வந்து போகிறது.

இங்கு பேப்பர் போடுபவர்
அப்பாவைப் போலவே இருக்கிறார்.

முருங்கைப் பூக்கள் சிதறிக்கிடக்கும்
முன்வாசலில் கோலமிடும் அதிகாலைகளில்
புன்னகையுடன் சைக்கிளில்
அவர் கடந்து செல்வது
சற்று ஆறுதலாயிருக்கிறது.

இன்று
பகல் உணவு முடிந்த
பாத்திரம் ஒழித்த பின்
ஓய்வாக
தலையணைக்கு
உறை தைத்துப் போட்டேன்.

நம் வீட்டிலிருந்து எடுத்து வந்த
பழைய தலையணையை
பிரித்துப் பார்த்ததில்
நைய்ந்த பஞ்சுகளினூடே
தம்பியின் கிழிந்த சட்டையும்
கையில் கிடைத்தது.

பள்ளி நாடகத்திற்காக
விசிலுடன் கூடிய
நேரு மாமா குர்தாவிற்காக
அழுது புரண்டு
அன்றவன் வாங்கியது
இப்போது கண்முன் விரிகிறது.

அம்மா அறிவது
வீட்டுக்குத் தெரியாமல்
பால் காசில் மிச்சம் பிடித்து
மூணாம் வீட்டு பாபு அம்மாவிடம்
சீட்டு கட்டுகிறேன்.

போன மாதம் தள்ளு
பாதிக்குப் பாதி போனது.
குறைந்தால்
இரு மாதங்களில் எடுத்து
தங்கச்சிக்கு
கம்மல் செய்து அனுப்புகிறேன்.
சிலவேளைகளில் இங்கு
இரவுகளில்
உஷ்ணம் தாங்காமல்
ஓட்டுக்கூரையிலிருந்து
தேள்கள் விழுகின்றன.
நான் சுத்தமாக இல்லாததுதான்
இதற்கு காரணமென்று
மாமியார் முணுமுணுக்கிறாள்.
ஆரம்பத்தில்
ஒழுங்காயிருந்த இவர்
இப்போதெல்லாம் குடித்துவிட்டு
அகாலத்தில் வீடு திருப்புகிறார்.
மற்றபடி
நான் நலமாக இருக்கிறேன்.

--------

**10.ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்**

**தாமரை**

கோவையில் பிறந்த கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியரும் ஆன தாமரை ஓர் இயந்திரப் பொறியியல் பட்டதாரி. இவரின் தந்தை கவிஞராகவும் நாடகாசிரியராகவும் விளங்கியுள்ளார். ‘ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்’ என்ற கவிதைத் தொகுப்பை அளித்துள்ள தாமரை, சிறுகதைகளும் எழுதக் கூடியவர். சந்திரக் கற்கள், என் நாட்குறிப்பின் நடுவிலிருந்து சில பக்கங்கள் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார். இலக்கியப் படைப்புகளுக்காகத் திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, சிற்பி விருது ஆகியவற்றையும் பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ளார்.

வசீகரா, அழகிய அசுரா, தவமின்றிக் கிடைத்த வரமே, எனப் பல சிறந்த திரைப்பாடல்கள் உட்பட நூற்றுக்கும் மேலான திரையிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இலங்கை, சிங்கப்பூர் நாடுகளுக்குப் பயணித்துள்ளார். இவர், ஆங்கிலச் சொற்களைக் கலந்து பாடல்கள் எழுதுவதில்லை என உறுதி கொண்டுள்ளார். திரையிசைத் துறையில் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ், இயக்குநர் கௌதம் மேனன் ஆகியோர் படங்களில் தாமரை அதிக பாடல்களை எழுதியுள்ளார். இம்மூவர் கூட்டணி வெற்றிப் பாடல்களை தந்துள்ளது. ஈழத் தமிழரின் பெருவலியைப் பேசுகிறது இக்கவிதை.

கசப்பாக இருந்தது
அம்மா அப்பாவையும்
ஆற்றோர கிராமத்தையும்
நூறுமைல் தூரத்தில்
விட்டுவந்து
அப்படியென்ன படிப்பு?

விடுதி
சென்ம விரோதியாயிற்று…
காற்றடித்து என்
பிறந்த மண்ணை அள்ளி
வந்து போட்டதால்
சன்னல் மட்டும்
சிநேகிதியாயிற்று…
வாரம் இருமுறை நானும்
மும்முறை பெற்றோரும்
வந்து போனோம்…
ஆனாலும்
இதென்ன படிப்பு
இதென்ன வாழ்க்கை…?
குறைந்தது நூறுமுறை
என் கடிதம்
சுமந்து போனது
கண்ணீரையும், கடந்த
காலத்தையும், வந்து
அழைத்துப் போங்களையும்….

திடீரென்று எனக்குள் ஒரு கதவு
அறைந்து திறந்தது
என் அறைக்கதவு
திறந்தது போலவே…
அறைத் தோழியாய் வந்தவள்
என்னைவிடச் சின்னவள்
அகதிகள் ஒதுக்கீட்டில்
இடம் கிடைத்திருக்கிறது
யாழ்ப்பாணத்துக்காரியாம்!

இறுக்கி மூடிய உதட்டுக்குள்ளிருந்து
கள்ளிப்பால் போல் ஒவ்வொன்றாய்
சொட்டிய கதைகள்…

என் நேற்றைய கடிதம் கண்டு
அம்மா வியந்திருக்க வேண்டும்

அம்மா நான் மிக நலம்
அடிக்கடி வரவேண்டாம்
அழுவதை நான் நிறுத்திவிட்டேன்
அடுத்தமுறை அங்கே
வரும்போது
ஒரு சிநேகிதியை அழைத்து
வருவேன்….
முடிந்தால் அவளையும்
மகளே என்று விளி…

## 11.ஹைகூக் கவிதைகள்

**ஈரோடு தமிழன்பன்**

ஈரோடு தமிழன்பன் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்தவர். தந்தை ஈரோட்டுப் பெரியாருக்குப் பிறகு, ஈரோடு என்ற ஊரை பெயரோடு சேர்த்துக்கொண்டு ஈரோட்டுக்குப் பெருமை சேர்த்த வருபவர். மரபுக்கவிதை புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை மூன்று பாவும் எழுத வல்லவர். கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள ஈரோடு தமிழன்பன் வானம்பாடி இயக்கத்தைச் சார்ந்த கவிதையாளர்களுள் ஒருவர். சமூக முன்னேற்றமும் தமிழ்ப்பற்றும் இவரது கவிதைகளின் அடிநாதம். தோணி வருகிறது, ஊமை வெயில், தீவுகள் கரையேறுகின்றன, அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் போன்றவை இவரது சிறந்த படைப்புகளாகும்.

'வணக்கம் வள்ளுவ' என்ற கவிதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதமி விருதை 2004-ஆம் ஆண்டு பெற்றார். சப்பானிய மொழியில் அமையும் குறுகிய அடியோடு (மூன்றடி) கூடி அமையும் கவிதைகள் ஹைக்கூ கவிதைகள் எனப்படும். தமிழில் துளிப்பா, மின்பா, மின்மினிக் கவிதைகள், வாமனக் கவிதைகள் என்றும் இதனை வழங்குவர். இவரது 'சூரியப்பிறைகள்' என்னும் தொகுப்பிலடங்கியுள்ள ஹைகூக் கவிதைகள் இங்கு இடம் பெற்றுள்ளன.

- மன்மதச் சாம்பலில்
  மறைந்து கிடந்தது ஒரு கங்கு
  சிவன் எரிந்தான்.

- மாயன்
  மந்திரியானால் என்ன?
  மாடுகளுக்குப் புல்லே போதும்.

- பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
  முத்தமிட்டுச் சொன்னது பூமி
  ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!

- கவிதைக்கு
  ஆயிரம் கைகள்
  கப்பறை நிறைய ஓட்டைகள்.

- ஓட்டுப் போட்டுவிட்டுத்
  திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது.
  தனது கல்லறையில் வேறொரு பிணம்.

- களத்து மேட்டில்
  பதர் தூற்றுகிறார்கள் - எனக்கொரு
  முறம் தரமாட்டார்களா?

- சிலம்பை
  உடைத்து என்ன பயன்?
  அரியணையிலும் அந்தக் கொல்லன்.

- உள்ளத்தில் ஓர்ஊற்றுத் தோண்டினேன்
  உட்கார்ந்து குடிக்க
  என்னோடு ஆயிரம் பேர்.

- ஆகாயமும் அழகு
  பூமியும் அழகு - ஆம்
  என் கையில் ரொட்டித் துண்டு.

- ரோஜாவை
  ரசிக்கும் பார்வையைத் துடைத்துக் கொள்
  மிதிபட்ட புல்லின் ரத்தம்.

--------

**12.நாட்டுப்புறப் பாடல்கள்**

தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலானவற்றை யார் எழுதினார்கள் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. காலம் காலமாக, வாய்மொழியாக, வாழக்கையின் பகுதியாக பாடப் பெற்றனவே இந்த நாட்டுப்புறப் பாடல்கள். எழுத்தில் கிடைப்பவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், அதற்குப் பின்பும் சில அறிஞர்களின் அயராத பணியால் ஆவணப்படுத்தப்பட்டவை ஆகும். இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்ட பாடல்கள் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் ஒரு துளி என்றால் அது மிகையாகது.

நாட்டுப்புற மக்களின் பாடல்களில் மிகவும் சிறப்புடையது தெம்மாங்குப் பாடல்களாகும். இவற்றை இசையுடன் பாடி ஆடி மகிழ்வர். தேன்பாங்கு என்பது தெம்மாங்கு ஆயிற்று என்பர். காதலையும் தொழிலையும் இணைத்து நெய்த இலக்கியம் இது. இப்பாடல்களில் ஒளிவு மறைவில்லாத காதல் உள்ளங்களைக் காணலாம்.

**தெம்மாங்கு பாடல் - தங்க ரத்தினமே**

1. காடுவெட்டிக் கல்பொறுக்கிக்
   கம்புசோளம் தினைவிதைத்துக்
   காலைமாலை காட்டைக் காக்கத் - தங்கரத்தினமே
   கண்விழித்திருந்தானாம் - பொன்னுரத்தினமே

2. கறுப்பானை ஓடிவரக்
   கள்ளரெல்லாம் தினைவிதைக்க
   வெள்ளானை ஓடிவரத் - தங்கரத்தினமே

வேடரெல்லாம் தினைவிதைக்கப் - பொன்னுரத்தினமே.

3. சின்னச்சின்ன வெற்றிலையாம்
சேட்டுக்கடை மிட்டாயாம்
மார்க்கட்டு மல்லிகைப்பூ - தங்கரத்தினமே
(உன்) கொண்டையிலே மணக்குதடி - பொன்னுரத்தினமே.

4. எல்லோரும் கட்டும்வேட்டி
ஏழைக்கேற்ற மல்லுவேட்டி
சந்தனங் கட்டும்வேட்டி - தங்கரத்தினமே
சரியான சரிகைவேட்டி - பொன்னுரத்தினமே.

5. ஒத்தத்தலை நாகன்வந்து
ஒட்டாக்காட்டை அழிச்சிடுத்தே
ஆராரைக் காவல்வைப்போம் - தங்கரத்தினமே
அழகான தினைப்பயிர்க்குப் - பொன்னுரத்தினமே.

6. தெய்வானையைக் காவல் வைத்தால்
தீஞ்சிடுமே தினைப்பயிரு வள்ளியைக்
காவல் வைத்தால் - தங்கரத்தினமே
வனத்துக்கொரு சேதமில்லை - பொன்னுரத்தினமே.

7. மூத்தண்ணன் பொண்சாதியை
மூணுமாசம் காவல் வைப்போம்
ஏழையண்ணன் பொண்சாதியை - தங்கரத்தினமே
ஏழுமாசம் காவல் வைப்போம் - பொன்னுரத்தினமே.

8. சாய்ந்திருந்து கிளிவிரட்டச்
சாய்மானமும் பொன்னாலே
உட்கார்ந்து கிளிவிரட்டத் - தங்கரத்தினமே
முக்காலியும் பொன்னாலே - பொன்னுரத்தினமே.

-------------

**தொழிற்பாடல் - கதிரறுப்பு**

அறுவடைக்குக் கூட்டம் கூட்டமாக உள்ளூர் வேலையாட்களும் வெளியூர் கூலியாட்களுமாக வருவார்கள். கதிரறுத்து, கட்டுக்கட்டி, களத்துக்கு தூக்கிச் சென்று, வட்டம் உதறி, புணையாலடித்து, மணி தூவி, நெல்லைக் குவியலாகக் குவிப்பார்கள். ஆண்களும் பெண்களும் பலவிதமான இவ்வேலைகளில் ஈடுபடும்போது சோர்வு ஏற்படாதிருக்க அறுவடைப் பாடல்களைப் பாடுவார்கள். உழவன் உழத்தி பாடுவதாக அமைகிறது இப்பாடல்.

**பெண்**

கோடை கருதறுப்பே
கொடிக்காலே சூழ்ந்திருப்பே
நாளக் கருதறுப்பே
நானும் வந்தாலாகாதோ!

**ஆண்**

கஞ்சிக் கலயம் கொண்டு
கருதறுக்கப் போற புள்ள
காக்காய் அலம்புதடி
கருத்தப் புள்ள உங்கலயம்!

**பெண்**

நெல்லுக் கதிரானேன்
நேத்தறுத்த தாளானேன்
நேத்து வந்த தோழனுக்கு
நேரம் தெரியாதோ!

**ஆண்**

கருதறுப்பில கங்காணத்திலே
கமகமங்குது குமுகுமுங்குது
கன்னத்து மஞ்சள் என்னைப்பகட்டுது
முன்னே போற பொண்ணே!
உன்னைத் தாண்டி பொண்ணே

**பெண்**

ஊரோரம் கதிரறுத்து
உரலுப் போல கட்டுக்கட்டி
தூக்கிவிடும் கொத்தனாரே
தூரகளம் போய்ச்சேர
கருதறுத்துக் கிறுகிறுத்து
கண்ணு ரெண்டும் பஞ்சடைச்சி
தூக்கிவிடும் கொத்தனாரே
தோப்புக் களம் போய்ச் சேர

**ஆண்**

நெல்லுக் கருதறுத்து
நிமிர்ந்து நிற்கும் செவத்தபுள்ள - என்
சொல்ல மறந்திராத - நீ
சொன்னபடி நானிருப்பேன்!

**பெண்**

தும்ப மலர் வேட்டி கட்டி
தூக்குப் போணி கையிலேந்தி
வராக எங்க மாமன்
வட்டம் உதறுதற்கே!

-------------------

## BHARATHIAR UNIVERSITY, COIMBATORE-641 046.
### UNDER GRADUATE DEGREE PROGRAMMES ( CBCS Semester Pattern )
### (For the students admitted during the academic year 2017 -2018 onwards)
### பாடத்திட்டம் - இரண்டாம் பருவம் - பகுதி - I - தாள் - II
**(2017-2018ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)**
**(செய்யுள், உரைநடை, இலக்கிய வரலாறு, விண்ணப்பம் வரைதல்)**

**அலகு - I**

1.திருக்குறள் (மூன்று அதிகாரங்கள்)

அ.அன்புடைமை

ஆ.அறிவுடைமை

இ.பிரிவாற்றாமை

2.சிறுபஞ்சமூலம் - 11-20 பாடல்கள் (10 பாடல்கள்)

3.பழமொழி நானூறு - முயற்சி - முதல் 10 பாடல்கள்

**அலகு - II**

1. நந்திக் கலம்பகம்
2. திருப்பாவை, திருவெம்பாவை
3. சித்தர் பாடல்கள்

**அலகு - III** - உரைநடைத் திரட்டு -NCBH, வெளியீடு.

1. சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகள் - பேரா.இரா.மோகன்
2. உருவ ஊன்று பாத்திரங்கள் - முனைவர் கா.மீனாட்சிசுந்தரம்
3. திருக்குறளும் தந்தை பெரியாரும் - பேரா.க.பஞ்சாங்கம்
4. இயற்கையும் மனிதனும் - முனைவர் க.சிவமணி
5. பாட்டு ஆட்டங்கள் - ஆறு.இராமநாதன்

**அலகு - IV**

1. வல்லினம் மிகும் இடம் - மிகா இடம்
2. வினா விடை வகைகள் - (அறுவகை வினா, எண்வகை விடை)
3. ஆகுபெயர் விளக்கம் - பயன்பாடு வகைகள் 10.

**அலகு - V - இலக்கிய வரலாறு பாடத்திட்டத்தைத் தழுவியது.**

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
2. தமிழ் உரைநடையின் தோற்றமும் - வளர்ச்சியும்

**பயிற்சிக்குரியன**

3. விண்ணப்பங்கள், மடல்கள் எழுதச் செய்தல்.

---

**இரண்டாம் பருவம் - பகுதி I - தாள்-II**

**வினாத்தாள் அமையும் முறை**

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 75**

**பிரிவு - அ** **10×1=10**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

ஒரு சொல் / தொடரில் விடை தருக.

**பிரிவு - ஆ** **5×5=25**

செய்யுள் - 2 வினாக்கள்

உரைநடை - 2 வினாக்கள்

அலகு - 4 - 1 வினா

**பிரிவு - இ** **5×8=40**

செய்யுள் - 2 வினாக்கள்

உரைநடை - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

பயிற்சிக்குரியன - 1 வினா (மடல்கள், விண்ணப்பங்கள்)

குறிப்பு : ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் இது அல்லது அது என்ற வகையில், அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல் வேண்டும்.

‘அ’ பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்து கேட்கப்படல் வேண்டும்.

-------

**1.திருக்குறள்**

**அ.அன்புடைமை**

1. அன்பிற்கும் உண்டோ, அடைக்கும் தாழ்?ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

2. அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்பு உடையார்
என்பும் உரியர், பிறர்க்கு.

3. அன்போடு இயைந்த வழக்கு' என்ப-'ஆர் உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு'.

4. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை; அது ஈனும்,
‘நண்பு’ என்னும் நாடாச் சிறப்பு.

5. அன்புற்று அமர்ந்த வழக்கு' என்ப-'வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு'.

6. அறத்திற்கே அன்பு சார்பு' என்ப, அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

7. என்பு இலதனை வெயில் போலக் காயுமே-
அன்பு இலதனை அறம்.

8. அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல்மரம் தளிர்த்தற்று.

9. புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்-யாக்கை
அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு?.

10. அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு.

**ஆ.அறிவுடைமை**

1. அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரண்.

2. சென்ற இடத்தால் செலவிடா, தீது ஒரீஇ,
நன்றின் பால் உய்ப்பது-அறிவு.

3. எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப் பொருள்
மெய்ப் பொருள் காண்பது-அறிவு.
4. எண் பொருளவாகச் செலச் சொல்லி, தான் பிறர்வாய்
நுண் பொருள் காண்பது-அறிவு.
5. உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது-அறிவு.
6. எவ்வது உறைவது உலகம், உலகத்தொடு
அவ்வது உறைவது-அறிவு.
7. அறிவு உடையார் ஆவது அறிவார்; அறிவு இலார்
அஃது அறிகல்லாதவர்.
8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல், அறிவார் தொழில்.
9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை-
அதிர வருவதோர் நோய்.
10. அறிவு உடையார் எல்லாம் உடையார்; அறிவு இலார்
என் உடையரேனும் இலர்.

**இ.பிரிவு ஆற்றாமை**

1. செல்லாமை உண்டேல், எனக்கு உரை; மற்று நின்
வல்வரவு, வாழ்வார்க்கு உரை
2. இன்கண் உடைத்து அவர் பார்வல்; பிரிவு அஞ்சும்
புன்கண் உடைத்தால், புணர்வு
3. அரிதுஅரோ, தேற்றம்-அறிவுடையார்கண்ணும்
பிரிவு ஓர் இடத்து உண்மையான்.
4. அளித்து அஞ்சல்! என்றவர் நீப்பின், தெளித்த சொல்
தேறியார்க்கு உண்டோ, தவறு?.
5. ஓம்பின், அமைந்தார் பிரிவு ஓம்பல்! மற்று அவர்
நீங்கின், அரிதால், புணர்வு!.
6. பிரிவு உரைக்கும் வன்கண்ணர் ஆயின், அரிது, ‘அவர்
நல்குவர்’ என்னும் நசை.

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல்-முன்கை
இறை இறவாநின்ற வளை!.

8. இன்னாது, இனன் இல் ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது, இனியார்ப் பிரிவு.

9. தொடின் சுடின் அல்லது, காமநோய் போல,
விடின் சுடல் ஆற்றுமோ, தீ?.

10. அரிது ஆற்றி, அல்லல் நோய் நீக்கி, பிரிவு ஆற்றி,
பின் இருந்து, வாழ்வார் பலர்.

--------

2. சிறுபஞ்சமூலம்

11. நாண் இலான் சால்பும், நடை இலான் நல் நோன்பும்,
ஊண் இலான் செய்யும் உதாரமும், ஏண் இலான்
சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவி செயலும்,-
நாவகம் மேய் நாடின் நகை.

12. கோறலும் நஞ்சு; ஊனைத் துய்த்தல் கொடு நஞ்சு;
வேறலும் நஞ்சு, மாறு அல்லானை; தேறினால்,
நீடு ஆங்குச் செய்தலும் நஞ்சால்; இளங்கிளையை
நாடாதே, தீது உரையும் நஞ்சு.

13. இடர் இன்னா, நட்டார்கண்; ஈயாமை இன்னா;
தொடர் இன்னா, கள்ளர்கண்; தூயார்ப் படர்வு இன்னா;-
கண்டல் அவிர் பூங் கதுப்பினாய்!-இன்னாதே,
கொண்ட விரதம் குறைவு.

14. கொண்டான் வழி ஒழுகல் பெண்; மகன் தந்தைக்குத்
தண்டான் வழி ஒழுகல்; தன் கிளை அஃது; அண்டாதே,
வேல் வழி வெம் முனை வீழாது, மன் நாடு;
கோல் வழி வாழ்தல் குணம்.

15. பிழைத்த பொறுத்தல் பெருமை; சிறுமை
இழைத்த தீங்கு எண்ணி இருத்தல்; பிழைத்த,
பகை, கெட வாழ்வதும் பல் பொருளால் பல்லார்
நகை கெட வாழ்வதும், நன்று.

16. கதம் நன்று, சான்றாண்மை தீது, கழிய
மதம் நன்று, மாண்பு இலார் முன்னர்; விதம் நன்றால்,

கோய் வாயின் கீழ் உயிர்க்கு ஈ துற்று, குரைத்து எழுந்த
நாய் வாயுள் நல்ல தசை.

17. நட்டாரை ஆக்கி, பகை தணித்து, வை எயிற்றுப்
பட்டு ஆர் அணி அல்குலார்ப் படிந்து ஒட்டி,
துடங்கினார், இல்லகத்து, அன்பின் துறவாது;-
உடம்பினான் ஆய பயன்.

18. பொய்யாமை பொன் பெறினும், கள்ளாமை, மெல்லியார்
வையாமை, வார் குழலார் நச்சினும் நையாமை,
ஓர்த்து உடம்பு பேரும் என்று, ஊன் அவாய் உண்ணானேல்,
பேர்த்து உடம்பு கோடல் அரிது.

19. தேவரே, கற்றவர்; கல்லாதார் தேருங்கால்,
பூதரே; முன் பொருள் செய்யாதார் ஆதரே;
'துன்பம் இலேம், பண்டு, யாமே வனப்பு உடையேம்!'
என்பர், இரு கால் எருது.

20. கள்ளான், சூது என்றும் கழுமான், கரியாரை
நள்ளான், உயிர் அழுங்க நா ஆடான், எள்ளானாய்,
ஊன் மறுத்துக் கொள்ளானேல், ஊன் உடம்பு எஞ் ஞான்றும்
தான் மறுத்துக் கொள்ளான், தளர்ந்து.

--------------------

## 3.பழமொழி நானூறு

1. அரிது அவித்து, ஆசு இன்று உணர்ந்தவன் பாதம்,
விரி கடல் சூழ்ந்த வியன் கண் மா ஞாலத்து,
உரியதனில் கண்டு உணர்ந்தார் ஓக்கமே-போல,
பெரியதன் ஆவி பெரிது.

2. கல்லாதான் கண்ட கழி நுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால், சோர்வு படுதலால், நல்லர்!
வினா முந்துறாத உரை இல்லை;-இல்லை,
கனா முந்துறாத வினை.

3. கல்வியான் ஆய கழி நுட்பம், கல்லார் முன்
சொல்லிய நல்லவும், தீய ஆம்,-எல்லாம்
இவர் வரை நாட!-தமரை இல்லார்க்கு
நகரமும் காடு போன்றாங்கு.

4. கேட்பாரை நாடி, கிளக்கப்படும் பொருட்கண்
வேட்கை அறிந்து, உரைப்பார், வித்தகர்;-வேட்கையால்
வண்டு வழிப்படரும் வாள் கண்ணாய்!-தோற்பன
கொண்டு புகாஅர், அவை.

5.புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
புலம் மிக்கவர்க்கே புலனாம்;-நலம் மிக்க
பூம் புனல் ஊர!-பொது மக்கட்கு ஆகாதே;
பாம்பு அறியும் பாம்பின கால்.

6.ஈனுலகத்துஆயின், இசை பெறூஉம்; அஃது இறந்து,
ஏனுலகத்துஆயின், இனிது, அதூஉம்; தான் ஒருவன்
நாள்வாயும் நல் அறம் செய்வாற்கு இரண்டு உலகும்
வேள் வாய் கவட்டை நெறி.

7.ஆஅம் எனக்கு எளிது' என்று உலகம் ஆண்டவன்,
மேஎந் துணை அறியான், மிக்கு நீர் பெய்து, இழந்தான்;-
தோஒம் உடைய தொடங்குவார்க்கு இல்லையே,
தா அம் தர வாரா நோய்.

8.எந் நெறியானும் இறைவன் தன் மக்களைச்
செந் நெறிமேல் நிற்பச் செயல் வேண்டும்; அந் நெறி-
மான் சேர்ந்த நோக்கினாய்!-ஆங்க; அணங்கு ஆகும்,
தான் செய்த பாவை தனக்கு.

9.திருந்தாய் நீ, ஆர்வத்தை! தீமை உடையார்,
'வருந்தினார்' என்றே வயப்படுவது உண்டோ?
அரிந்து அரிகால் பெய்து அமையக் கூட்டியக்கண்ணும்,
பொருந்தா மண், ஆகா, சுவர்.

10.பெரிய நட்டார்க்கும் பகைவர்க்கும், சென்று,
திரிவு இன்றித் தீர்ந்தார்போல் சொல்லி, அவருள்
ஒருவரோடு ஒன்றி ஒருப்படாதாரே,
இரு தலைக் கொள்ளி என்பார்.

--------------

**நந்திக் கலம்பம்**

இந்நூல் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றதாகும். இது ஏனைய கலம்பங்களைப் போல அல்லாது ஒரு வரலாற்று நூலாக விளங்குகிறது. இந்நூலைப் பாடியவர் யாரென்று தெரியவில்லை. இந்நூலின் காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். ஆகவே இதுவே கலம்பகங்களுக்கெல்லாம் முதன்மையானது எனக் கொள்ளலாம்.

**நந்தி மன்னனின் அரண்மனைச் சிறப்பு**

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப
பீடியல் மாகளிற்றார் பிச்சத்தார் - கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து.

**பாட்டுடைத் தலைவன் பெருமை கூறல்**

குலமரபும் ஒவ்வாது பயின்றுவந்த
குடித்தொழிலும் கொள்படையின் குறையும் கொற்றச் சில
அளவுஞ் சிந்தியாத் தெவ்வர் தேயத்
தெள்ளாற்றில் செருவென்ற செங்கோல் நந்தி
புலஅரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே
புவலயம் தனிற்கரியாய் நின்ற மன்னர்
சொல்வரிய திருநாமம் உனக்கே அல்லால்
சொல்ஒருவர்க் கிசையுமோ தொண்டைக் கோவே.

**மன்னன் மாலையின் மாண்பு**

என்னையா னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கும்
மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன்முடியின்
மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும் என்
கால்வருடும் சேடியர்தம் கை.

தொடர்ந்து பலர் இரந்த தொண்டையந்தார் நாங்கள்
நடந்த வழிகள் தொறும் நாறும் - படர்ந்த
மலைகடாம் பட்டனைய மால்யானை நந்தி
முறைகடாம் பட்டசையா முன்.

**நந்தியின் கொடைப்பெருமை**

இந்தப் புவியில் இரவலருண் டென்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ - நந்தி
தடங்கைப்பூ பாலன்மேல் தண்கோவை பாடி
அடங்கப்பூ பாலரா னார்.

செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தையல் உறவு தவிர்ந்தோமே - வையம்
மணக்கும் பெரும்புகழான் மானபரன் நந்தி
இணக்கம் பிறந்தநாள் இன்று.

**நந்தியின் நாட்டில் முத்துச்சிறப்பு**

அடிவிளக் கும்துகில் ஆடை விளக்கும் அரசர்பந்திப்
பிடிவிளக்கும்எங்கள் ஊரார் விளங்கும் பெரும்புகழால்
படிவிளக் கும்நந்தி எங்கோன பெரும்படை வீட்டுக் கெல்லாம்
விடிவிளக் கும்இது வேநாங்கள் பூண்பதும் வெண்முத்துமே.

**கையறுநிலை**

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்துதன் கீர்த்தி

கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே.

------

**ஆண்டாள் அருளிய திருப்பாவை**

பாவை நோன்பைப் பற்றி ஆண்டாள் பாடிய முப்பது பாடல்களே திருப்பாவை என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வாருக்கு பூமியிலிருந்து கிடைத்த மகள்தான் கோதை என்ற ஆண்டாள். இவர் கண்ணனின் தீவிர பக்தை. அவரையே நினைத்திருந்து கடைசியில் ஸ்ரீ ரங்கத்தில் அவைரயே மணந்து அவரால் ஆட்கொள்ளப்பட்டவர்.

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
நீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்
பாரோர் புகழ்ப் படிந்தேலோ ரெம்பாவாய்!

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்.
செய்யா தனசெய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையம் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உதந்தேலோ ரெம்பாவாய்.

3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லாடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்ததேலோ ரெம்பாவாய்.

4. ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைய பற்பநா பன்கையில்

ஆழிபோல மின்னி, வலம்புரிபோல நின்றதிா்ந்து,
தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல
வாழ உலகனில் பெய்திடாய், நாங்களும்
மாா்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீா் யமுனைத் துறைவனை,
ஆயா் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலா் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு செப்பேலோ ரெம்பாவாய்.

6. புள்ளும் சிலம்பினகாண், புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு.
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமா்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவா்களும் யோகிகளும்
மௌள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிா்ந்தேலோ ரெம்பாவாய்.

7. கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபோ்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியா் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நூராயணன் மூா்த்தி
கேசவனைக் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

8. கீழ்வானம் வெள்ளென்ற, எருமை, சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண், மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம். கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய்ப் பாடிப் பறைக்கொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூமங் கமழ் துயிலணைமேல் கண்வளரும்.

மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்.
மாமீர் ! அவளை எழுப்பீரோ! உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றிப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தோற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

------------

**மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவை**

மாணிக்கவாசகர் மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். இதனால் இவருக்குத் திருவாதவூரர் என்ற பெயரும் உண்டு. இவரின் நூல்களான திருவாசகமும், திருக்கோவையாரும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலையில் இவர் பாடிய பாடல்களே திருவெம்பாவை எனப்படுகின்றன. இப்பாடல்களில் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து மார்கழி மாதக் காலையில் சிவனைக் குறித்துப்பாடுவது போல பாடியுள்ளார்.

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்தற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள் வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்

திக்திக்கப் பேசுவாய் வந்துள் கடை திறவாய்
பத்துடையீா் ஈசள் பழ அடியீா் பாங்குடையீா்
புத்தடியோம் புன்மைதீா்த்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோரும் அறியோமோ
சித்தம் அழகியாா் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

4. ஒள்நித் திலநகையாய் இன்னம் புலா்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியாா் எல்லாம் வந்தாரோ
எண்ணிக்கொடு ள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்.
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே(வந்து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5. மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவா்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலா்ந்தின்றோ
வானே நிலவே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வாா் கழல்பாடி வந்தோா்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோா்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7. அன்னே இவையும் சிலவோ பல அமா்
உன்ன கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசோ் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னாம்கேள் வெற்றோயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையா்போல வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

8. கோழி சிலம்புச் சிலம்பும் குறுகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிய தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாயப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழி பாதமலர்
போதார்புனை முடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணாரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தோண்டருளன்
கோதில் கலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவினைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

-----

## சித்தர் பாடல்கள் - பெரிய ஞானக் கோவை

## சிவவாக்கியர் பாடல்

சித்தர் இலக்கியத்தில் சிவவாக்கியர் பாடலுக்குத் தனி மரியாதை தரப்படுவதுண்டு. காரணம், இவர் பாடல்களில் வழக்கமான சித்தர் கருத்துக்கான யோகம், குண்டலினி, வாசி கருத்துக்களுடன் புரட்சிகரமான கருத்துகளையும் கூறுவதால் இவர் புரட்சிச் சித்தர் என்றும் கூறப்படுகின்றார். சமுதாயப் புரட்சி செய்த இந்தச் சித்தர் ஆரம்ப காலங்களில் நாத்திகராக இருந்து ஆத்திகராக மாறினார் என்பதை இவரின் பாடல் கருத்துகள் புலப்படுத்துகின்றன.

1. நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பந் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

2. ஓசையுள்ள கல்லைநீ உடைத்திரண்டாய் செய்துமே

வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கின்றீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்து கிறீர்
ஈசனுக்கு கந்த கல்லெந்தக் கல்லு சொல்லுமே.

3. பண்ணிவைத்து கல்லையும் பழம்பொருளது என்றுநீர்
எண்ணம் உற்றும் என்னபேர் உரைக்கின்றீர்கள் ஏழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத்து அளிக்கவும்
ஒண்ணும் ஆகி உலகு அளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே.

4. ஊரில் உள்ள மனிதர்கள் ஒருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தை விட்டு செம்பை வைத்து இழுக்கின்றீர்
ஆரினாலும் அறியொணாத ஆதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் புரளி பாரும் பாருமே.

5. பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுன்ன தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ வனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே.

----------------

**கடுவெளிச்சித்தர் பாடல்**

கடுவெளி என்பது வெட்டவெளி அதாவது பிரமம். இந்தச் சித்தர் பிரபஞ்சத்தை வெட்ட வெளியாகக் கண்டு தம் ஆத்மானுபவத்தைப் பிறரும் அறிந்து நலம் பெறுவதற்காகப் பாடிய பாடல்கள் கடுவெளிச் சித்தர் பாடல்களாக நமக்கு அறிமுகமாகின்றன. இவரது இயற்பெயரோ வரலாறோ தெரியாத நிலையில் இவரது ஜீவசமாதி காஞ்சிபுரத்தில் இருக்கிறது என்ற செய்தியை மட்டும் போகர் தெரிவிக்கின்றார்.

**ஆனந்தக் களிப்பு**

1. பாபஞ்செய் யாதிரு மனமே - நாளைக்
கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்
பாபஞ்செய் யாதிரு மனமே.

2. சாபங்கொடுத்திட லாமோ - விதி
தன்னைநம் மாலே தடுத் திடலாமோ
கோபந் தொடுத்திட லாமோ - இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ.

3. சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம் - எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம்.

4. நீர்மேற் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவம் நேயம் - சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம்.

5. நந்த வனத்திலோ ராண்டி - அவன் நாலாறு
மாதமாய்க் குயவனை வேண்டி கொண்டுவந்
தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.

-----------------

**இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள்**

இடைக்காடு என்னும் ஊரினர். இடையர் குடியிலே பிறந்தவர். இதனால் இடைக்காடுச் சித்தர் எனப் பெயர் பெற்றார். இடைக்காடு - முல்லை நிலம். இங்கு ஆடு மாடு மேய்ப்பவர் - இடையர் - கோனார் எனப்படுவர். இக்கோனாரையும் ஆடு மாடுகளையும், முன்னிறுத்தி பாடியதால் இப்பெயர் பெற்றார் என்பர்.

1. எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லா பொருள்களும் எண்ணரிய
வல்லாளன் ஆதிபரம சிவனது
சொல்லால் ஆகுமே கோனாரே.

2. வானியல் போல வயங்கும் பிரமமே
சூனியம் என்றறிந்து ஏத்தாக்கால்
ஊனியல் ஆவிக்கு ஒருகதி இல்லையென்று
ஓர்ந்து கொள்ளுவீர் நீர் கோனாரே.

3. முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக்கு உறுதிகள் செய்யாக்கால்
சித்தியும் பத்தியும் சத்தியும் முத்தியும்
சேரா வாகுமே கோனாரே.

4. தொல்லைப் பிறவியின் தொந்தமுற்ற அறவே
சோம்பலற்றுத் தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவுள் எய்தும் பலம் உமக்கு
இல்லையென்று எண்ணுவீர் கோனரே.

5. ஆரண மூலத்தை அன்புட னே
பரமானந்தக் கோலத்தைப் பண்புடனே
பூரணமாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்
போதத்தைச் சார்ந்திரும் கோனாரே.

-------------------

**BHARATHIAR UNIVERSITY, COIMBATORE-641 046.**

**UNDER GRADUATE DEGREE PROGRAMMES ( CBCS Semester Pattern )**

**(For the students admitted during the academic year 2017 -2018 onwards)**

பாடத்திட்டம் - மூன்றாம் பருவம் - பகுதி – I - தாள் - III
(2017-2018ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)
(செய்யுள், புதினம், இலக்கணம், இலக்கிய வரலாறு, பயிற்சி கட்டுரை)

**பொருளடக்கம்**

**அலகு 1** 1. **சிலப்பதிகாரம் - கனாத்திறமுரைத்த காதை**

2. **மணிமேகலை - பீடிகை கண்டு பிறப்புணர்த்திய காதை**

3. **சீவகசிந்தாமணி - விமலையார் இலம்பகம் ( 1889 முதல் 1941 முடிய )**

**அலகு 2** 1. **கம்பராமாயணம் - குகப்படலம் (கங்கை காண் படலம்)**

2. **பெரியபுராணம் - அப்பூதியடிகள் புராணம்**

3. **தேம்பாவணி - வளன் சனித்த படலம் ( 167 முதல் 200 முடிய )**

**அலகு 3** **புதினம்** **சீத்தம்மா** - ஆசிரியர் : பட்சி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை

**அலகு 4** **பா - அணியிலக்கணம் ( பாடப்பகுதியை ஒட்டியவை)**

**1.நிலைமண்டில ஆசிரியப்பா, அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம்**

**2.உவமையணி, பண்பு,பயன், தொழில் உவமைகள்**

**3.உருவக அணி**

**4.தற்குறிப்பேற்ற அணி , 5. இல்பொருள் உவமை அணி**

**அலகு 5** **இலக்கிய வரலாறு**

**1.ஐம்பெருங்காப்பியங்கள், புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் புதினங்களின் வகைகள்- விளக்கம்**

**2. பொதுக்கட்டுரை**

--------------

மூன்றாம் பருவம் - பகுதி I - தாள்-III
வினாத்தாள் அமையும் முறை

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 75

பிரிவு - அ **10×1=10**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
ஒரு சொல் / தொடரில் விடை தருக.

பிரிவு - ஆ **5×5=25**

செய்யுள் - 2 வினாக்கள்

புதினம் - 2 வினாக்கள்

அலகு - 4 - 1 வினா

**பிரிவு - இ** **5×8=40**

செய்யுள் - 2 வினாக்கள்

புதினம் - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

பயிற்சிக்குரியன - 1 வினா (பொதுக் கட்டுரை)

குறிப்பு : ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் இது அல்லது அது என்ற வகையில், அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல் வேண்டும்.

'அ' பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்து கேட்கப்படல் வேண்டும்.

## அலகு - 1

### 1.சிலப்பதிகாரம் - கனாத்திறம் உரைத்த காதை

"**மகளிர் இரவிற்கு ஏற்ற கோலம் கொண்டு இல் உறை தெய்வத்தை வழிபடுதல்**"

அகல் நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை
நிகர் மலர் நெல்லொடு தூஉய், பகல் மாய்ந்த
மாலை மணி விளக்கம் காட்டி, இரவிற்கு ஓர்
கோலம் கொடி-இடையார்-தாம் கொள்ள-

**"மாலதியின் வரலாறு"**

மாலதி இறந்த மகவைக் கொண்டு தெய்வக் கோட்டங்களுக்குச் சென்று,வரம் வேண்டுதல்"

மேல் ஓர் நாள் மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்க,
பால் விக்கி, பாலகன்-தான் சோர, மாலதியும்,
'பார்ப்பானொடு மனையாள் என்மேல் படாதன விட்டு
ஏற்பன கூறார்' என்று ஏங்கி, மகக் கொண்டு,
அமரர் தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம்,
புகர் வெள்ளைநாகர்-தம் கோட்டம், பகல் வாயில்
உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேல்கோட்டம்,
வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம்,
நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம், புக்கு எங்கும்
'தேவிர்காள்! எம் உறு நோய் தீர்ம்' என்று மேவி-

**"சாத்தன் கோயிலில் மாலதி பாடுகிடக்க, இடாகினிப்பேய் அவள் கையிலிருந்த பிணத்தைப் பிடுங்கித் தின்னுதல்"**

ஓர் பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு,
ஏசும் படி ஓர் இளங்கொடி ஆய், 'ஆசு இலாய்!
செய் தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;
பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையில்
படு பிணம் தா' என்று, பறித்து, அவள் கைக் கொண்டு,
சுடுகாட்டுக் கோட்டத்து, தூங்கு இருளில் சென்று, ஆங்கு
இடு பிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,
மடிஅகத்து இட்டாள், மகவை-

"சாத்தன் மகவாய் வருதல்"

இடியுண்ட மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச் சாத்தன்
'அஞ்ஞை! நீ ஏங்கி அழல்' என்று, 'முன்னை

உயிர்க் குழவி காணாய்' என்று, அக் குழவி ஆய், ஓர்
குயில்-பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,
மாயக் குழவி எடுத்து, மடித் திரைத்து,
தாய் கைக் கொடுத்தாள், அத் தையலாள். தூய

**"தேவந்தியின் வரலாறு சாத்தன் கலை பல பயின்று; தேவந்தியுடன் எட்டு யாண்டு இல்லறம் புரிந்து நீங்குதல்"**

மறையோன் பின் மாணி ஆய், வான் பொருள் கேள்வித்
துறைபோய், அவர் முடிந்தபின்னர், இறையோனும்
தாயத்தாரோடும் வழக்கு உரைத்து, தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேய நாள்,
தேவந்தி என்பாள் மனைவி, அவளுக்கு,
'பூ வந்த உண் கண் பொறுக்க' என்று மேவி, தன்
மூவா இள நலம் காட்டி, 'எம் கோட்டத்து
நீ வா' என உரைத்து, நீங்குதலும்-
"தேவந்தி சாத்தன் கோட்டத்தை வழிபட்டிருத்தல்"
தூ-மொழி, ஆர்த்த கணவன் அகன்றனன், "போய் எங்கும்
தீர்த்தத் துறை படிவேன்" என்று; அவனைப் போர்த்து இங்ஙன்
மீட்டுத் தருவாய்' என ஒன்றன்மேல் இட்டு,
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்,

**"தேவந்தி கண்ணகியிடம் சென்று ஆசி கூறுதல்"**

வாட்டு-அரும் சீர்க்
கண்ணகி-நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று
எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி;
அறுகு, சிறு பூளை, நெல்லொடு தூஉய்ச் சென்று;
'பெறுக, கணவனோடு!' என்றாள்-

**"கண்ணகி தான் கண்ட கனாவினைத் தேவந்திக்கு உரைத்தல்"**

பெறுகேன்; கடுக்கும் என் நெஞ்சம்; கனாவினால், என் கை
பிடித்தனன் போய் ஓர் பெரும் பதியுள் பட்டேம்;
பட்ட பதியில், படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என்-தன்மேல்;
"கோவலற்கு உற்றது ஓர் தீங்கு" என்று அது கேட்டு,
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனொடு
ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;
தீக் குற்றம் போலும், செறி-தொடீஇ! தீக் குற்றம்
உற்றேனொடு உற்ற உறுவனோடு யான் உற்ற
நல் திறம் கேட்கின் நகை ஆகும்' -

**"தேவந்தி கூறிய தேறுதல் உரை"**

பொன்-தொடீஇ! கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில்; போய்க் கெடுக! உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடல் அவிழ் நெய்தல் அம் கானல், தடம் உள,
சோம குண்டம், சூரிய குண்டம், துறை மூழ்கி,
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு

தாம் இன்புறுவர் உலகத்து, தையலார்;
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒரு நாள்
ஆடுதும்' என்ற அணி-இழைக்கு-அவ் ஆய்-இழையாள்,

**"கண்ணகியின் மறுமொழி"**

'பீடு அன்று' என இருந்தபின்னரே-
"கோவலன் வருகையும், அவன் நிகழ்ந்ததற்கு இரங்கிக் கூறுதலும்"
'நீடிய காவலன் போலும், கடைத்தலையான் வந்து-நம்
கோவலன்!' என்றாள் ஓர் குற்றிளையாள். கோவலனும்
பாடு அமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தம் கண்டு, 'யாவும்
சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலம் தரு வான் பொருள்-குன்றம் தொலைந்த;
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு' என்ன-

**"கண்ணகியின் விடை"**

நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டி,
'சிலம்பு உள; கொண்ம்' என-

**"கோவலன் மதுரை சென்று பொருள் ஈட்ட எண்ணியுள்ள தனது கருத்தை வெளியிட்டு, விடியுமுன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லுதல்"**

'சேயிழை! கேள்; இச் சிலம்பு முதல் ஆக, சென்ற கலனோடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்த சீர்
மாட மதுரை அகத்துச் சென்று; என்னோடு இங்கு,
ஏடு அலர் கோதாய்! எழுக' என்று, நீடி
வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்
கனை சுடர் கால் சீயாமுன்.

**"வெண்பா"**

காதலி கண்ட கனவு கரு நெடுங் கண்
மாதவி-தன் சொல்லை வறிதாக்க, மூதை-
வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்
கனை சுடர் கால் சீயாமுன்.

--------

**2. மணிமேகலை - பீடிகை கண்டு பிறப்புணர்த்திய காதை**

**[ மணிமேகலை மணிபல்லவத்திடைப் பீடிகைகண்டு பிறப்பு உணர்ந்த பாட்டு ]**

ஆங்குஅது கண்ட ஆயிழை அறியாள்
காந்தள்அம் செங்கை தலைமேல் குவிந்தன
தலைமேல் குவிந்த கையள் செங்கண்
முலைமேல் கலுழ்ந்துமுத் தத்திரள் உகுத்துஅதின்
இடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
இறுநுசுப்பு அலச வெறுநிலம் சேர்ந்துஆங்கு
எழுவோள் பிறப்பு வழுஇன்று உணர்ந்து
தொழுதகை மாதவ! துணிபொருள் உணர்ந்தோய்!
காயங் கரையில் உரைத்ததை எல்லாம்
வாயே ஆகுதல் மயக்குஅற உணர்ந்தேன்

காந்தாரம் என்னும் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதிஎனும் அரசாள் வேந்தன்
மைத்துனன் ஆகிய பிரம தருமன்!
ஆங்குஅவன் தன்பால் அணைந்துஅறன் உரைப்போய்
தீங்கனி நாவல் ஓங்கும்இத் தீவிடை
இன்றுஏழ் நாளில் இருநில மாக்கள்
நின்றுநடுக்கு எய்த நீள்நில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இந்நகர்
நாகநல் நாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகேடு எய்தும்
இதன்பால் ஒழிகென,
மாபெரும் பேரூர் மக்கட்கு எல்லாம்
ஆவும் மாவும் கொண்டுகழிக என்றே
பறையில் சாற்றி நிறைஅருந் தானையோடு
இடவயம் என்னும் இரும்பதி நீங்கி
வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கரைஎனும் பேரியாற்று அடைகரைச்
சேய்உயர் பூம்பொழில் பாடிசெய்து இருப்ப,
எங்கோன் நீஆங்கு உரைத்தஅந் நாளிடைத்
தங்காது அந்நகர் வீழ்ந்துகேடு எய்தலும்
மருள்அறு புலவ!நின் மலர்அடி அதனை
அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய
அருள்அறம் பூண்ட ஒருபேர் இன்பத்து
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள்,
அரவக் கடல்ஒலி அசோதரம் ஆளும்
இரவி வன்மன் ஒருபெருந் தேவி
அலத்தகச் சீறடி அமுத பதிவயிற்று
இலக்குமி என்னும் பெயர்பெற்றுப் பிறந்தேன்
அத்தி பதிஎனும் அரசன் பெருந்தேவி
சித்திபுரம் ஆளும் சீதரன் திருமகள்
நீல பதிஎனும் நேர்இழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர்போல் தோன்றிய
இராகுலன் தனக்குப் புக்கேன் அவனொடு
பராஅரு மரபின்நின் பாதம் பணிதலும்,
எட்டுஇரு நாளில்இவ் இராகுலன் தன்னைத்
திட்டி விடம்உணும் செல்உயிர் போனால்
தீஅழல் அவனொடு சேயிழை மூழ்குவை;
ஏது நிகழ்ச்சி ஈங்குஇன்று ஆகலின்
கவேரக் கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப்பு எய்துதி;
அணியிழை நினக்குஓர் அருந்துயர் வருநாள்

மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி
அன்றுஅப் பதியில் ஆர்இருள் எடுத்துத்
தென்திசை மருங்கில்ஓர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திறல் நாகநாட்டு அரசர்
சினமாசு ஒழித்து மனமாசு தீர்த்துஆங்கு
அறச்செவி திறந்து மறச்செவி அடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவன் இருந்துஅறம் உரைக்கும்
திருந்துஒளி ஆசனம் சென்றுகை தொழுதி;
அன்றைப் பகலே உன்பிறப்பு உணர்ந்துஈங்கு
இன்றுயான் உரைத்த உரைதெளி வாய்என,
சாதுயர் கேட்டுத் தளர்ந்துஉகு மனத்தேன்
காதலன் பிறப்பும் காட்டா யோஎன
ஆங்குஉனைக் கொணர்ந்த அரும்பெருந் தெய்வம்
பாங்கில் தோன்றிப் பைந்தொடி கணவனை
ஈங்குஇவன் என்னும் என்றுஎடுத்து ஓதினை
ஆங்குஅத் தெய்வதம் வாரா தோஎன
ஏங்கினள் அழூஉம் இளங்கொடி தான்என்,

### 3. சீவகசிந்தாமணி - விமலையார் இலம்பகம்

### ( 1889 முதல் 1941 முடிய 54 பாடல்கள்)

### சீவகன் தம்பி நந்தட்டன் பதுமுகனை நோக்கிக் கூறுதல்

முருகு கொப்புளிக்கும் கண்ணி முறி மிடை படலை மாலைக்
குருதி கொப்புளிக்கும் வேலான் கூந்தல் மா இவர்ந்து செல்ல
உருவ வெம் சிலையினாற்குத் தம்பி இஃது உரைக்கும் ஒண் பொன்
பருகு பைங் கழலினாருள் பதுமுகன் கேட்க என்றே 1

விழு மணி மாசு மூழ்கிக் கிடந்தது இவ் உலகம் விற்பக்
கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிர் ஒளி மறையக் காப்பின்
தழுவினீர் உலகம் எல்லாம் தாமரை உறையும் செய்யாள்
வழுவினார் தம்மைப் புல்லாள் வாழ்க நும் கண்ணி மாதோ 2

தொழுத தம் கையின் உள்ளும் துறு முடி அகத்தும் சோர
அழுத கண்ணீரின் உள்ளும் அணிகலத்து அகத்தும் மாய்ந்து
பழுது கண் அரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றாது
ஒழிக யார் கண்ணும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற்றாரே 3

தோய் தகை மகளிர்த் தோயின் மெய் அணி நீக்கித் தூய் நீர்
ஆய் முது மகளிர் தம்மால் அரில்தபத் திமிரி ஆட்டி
வேய் நிறத் தோளினார்க்கு வெண் துகில் மாலை சாந்தம்
தான் நல கலங்கள் சேர்த்தித் தட முலை தோய்க என்றான் 4

வண்ணப் பூமாலை சாந்தம் வால் அணி கலன்கள் ஆடை
கண் முகத்து உறுத்தித் தூய்மை கண்டலால் கொள்ள வேண்டா
அண்ணல் அம் புள்ளோடு எல்லா ஆயிரம் பேடைச் சேவல்
உண்ணு நீர் அமிழ்தம் காக்க ஊகமோடு ஆய்க என்றான் 5

அஞ்சனக் கோலின் ஆற்றா நாகம் ஓர் அருவிக் குன்றின்
குஞ்சரம் புலம்பி வீழக் கூர் நுதி எயிற்றில் கொல்லும்
பஞ்சியின் மெல்லிதேனும் பகை சிறிது என்ன வேண்டா
அஞ்சித் தற்காத்தல் வேண்டும் அரும் பொருளாக என்றான் 6

பொருந்தலால் பல்லி போன்றும் போற்றலால் தாயர் ஒத்தும்
அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமை போன்றும்
திருந்து வேல் தெவ்வர் போலத் தீது அற எறிந்தும் இன்ப
மருந்தினால் மனைவி ஒத்தும் மதலையைக் காமின் என்றான் 7

**சீவகன் பதுமுகனுக்குக் கட்டளையிடல்**

பூந் துகில் மாலை சாந்தம் புனை கலம் பஞ்ச வாசம்
ஆய்ந்து அளந்து இயற்றப்பட்ட அடிசில் நீர் இன்ன எல்லாம்
மாந்தரின் மடங்கல் ஆற்றல் பதுமுகன் காக்க என்று ஆங்கு
ஏந்து பூண் மார்பன் ஏவ இன்னணம் இயற்றினானே 8

**தன் தாயைக் காணச் சீவகன் தன் தோழர்களுடன் செல்கின்ற வழியின் தன்மையைக் கூறுதல்**

சிறு கண் யானையின் இனம் சேர்ந்து சேவகம் கொளத்
துறுகல் என்று உணர்கலாத் துள்ளி மந்தி மக
நறிய சந்தின் துணி நாற வெந்தனகள் கொண்டு
எறிய எள்கி மயிர்க் கவரிமா இரியுமே 9

புகழ் வரைச் சென்னி மேல் பூசையின் பெரியன
பவழமே அனையன பல் மயிரப் பேர் எலி
அகழும் இங்குலிகம் அஞ்சன வரைச் சொரிவன
கவழ யானையின் நுதல் தவழும் கச்சு ஒத்தவே 10

அண்ணல் அம் குன்றின் மேல் வருடை பாய்ந்து உழக்கலின்
ஒண் மணி பல உடைந்து ஒருங்கு அவை தூளியாய்
விண் உளு உண்டு என வீழும் மா நிலமிசைக்
கண் அகன் மரம் எலாம் கற்பகம் ஒத்தவே 11

மானிடம் பழுத்தன கிலுத்தம் மற்று அவற்று அயல்
பால் முரண் பயம்பிடைப் பனை மடிந்த அனையன
கானிடைப் பாந்தள் கண் படுப்பன துயில் எழ
ஊன் உடைப் பொன் முழை யாளி நின்று உலம்புமே 12

சாரல் அம் திமிசிடைச் சந்தனத் தழை வயின்
நீர தீம் பூ மரம் நிரந்த தக்கோலமும்
ஏர் இலவங்கமும் மின் கருப்பூரமும்
ஒரு நாவி கலந்து ஓசனை கமழுமே 13

மைந்தரைப் பார்ப்பன மா மகள் மாக் குழாம்
சந்தனம் மேய்வன தவழ் மதக் களிற்று இனம்
அந்தழைக் காடு எலாம் திளைப்ப ஆமான் இனம்
சிந்த வால் வெடிப்பன சிங்கம் எங்கும் உள 14

வருக்கையின் கனிதொறும் வானரம் பாய்ந்து உராய்ப்
பொருப்பு எலாம் பொன் கிடந்து ஒழுகி மேல் திருவில் வீழ்ந்து
ஒருக்கு உலாய் நிலமிசை மிளிர்வ ஒத்து ஒளிர் மணி
திருக் கிளர் ஒளி குலாய் வானகம் செகுக்குமே 15

வீழ் பனிப் பாறைகள் நெறி எலாம் வெவ் வெயில்
போழ்தலின் வெண்ணெய் போல் பொழிந்து மட்டு ஒழுகுவ
தாழ் முகில் சூழ் பொழில் சந்தனக் காற்று அசைந்து
ஆழ் துயர் செய்யும் அவ் அருவரைச் சாரலே 16

**சீவகன், மற்றும் அவன் தோழர்கள் ஒரு சோலையை அடைதல்**

கூகையும் கோட்டமும் குங்குமமும் பரந்து
ஏகல் ஆகா நிலத்து அல்கி விட்டு எழுந்து போய்த்
தோகையும் அன்னமும் தொக்கு உடன் ஆர்ப்பது ஓர்
நாக நன் காவினுள் நயந்து விட்டார்களே 17

**தோழர்கள் தவப்பள்ளியை நன்கு அழகுபடுத்த, அப்பள்ளி பொலிவுபெற்று விளங்குதல்**

பூத்து அகில் தவழும் போர்வை பூசு சாந்து ஆற்றிப் பொன் நூல்
கோத்து நீர் பிலிற்றும் காந்தம் குங்கும வைரப் பொன் கோய்
சாத்துறி பவழக் கன்னல் சந்தன ஆல வட்டம்
நீத்தவர் இடத்து நாற்றி நிழல் மணி உலகம் செய்தார் 18

நித்தில முலையினார் தம் நெடுங் கணால் நோக்கப் பெற்றும்
கைத் தலம் தீண்டப் பெற்றும் கனிந்தன மலர்ந்த காண்க
வைத்து அலர் கொய்யத் தாழ்ந்த மரம் உயிர் இல்லை என்பார்
பித்து அலர் ஆயின் பேய்கள் என்றலால் பேசலாமோ 19

**சீவகன், தன் தாயைக் கண்டு வணங்குதல்**

பொறி மயில் இழியும் பொன் தார் முருகனின் பொலிந்து மாவின்
நெறிமையின் இழிந்து மைந்தன் மணிக்கை மத்திகையை நீக்கி
வெறுமையின் அவரைப் போக்கி வெள்ளிடைப் படாத நீரால்
அறி மயில் அகவும் கோயில் அடிகளைச் செவ்வி என்றான் 20

எல் இருள் கனவில் கண்டேன் கண் இடன் ஆடும் இன்னே
பல்லியும் பட்ட பாங்கர் வரும் கொலோ நம்பி என்று
சொல்லினள் தேவி நிற்பப் பதுமுகன் தொழுது சேர்ந்து
நல் அடி பணிந்து நம்பி வந்தனன் அடிகள் என்றான் 21

எங்ஙணான் ஐயன் என்றாட்கு அடியன் யான் அடிகள் என்னாப்
பொங்கி வில் உமிழ்ந்து மின்னும் புனை மணிக் கடகம் ஆர்ந்த
தங்கு ஒளித் தடக்கை கூப்பித் தொழுது அடி தழுவி வீழ்ந்தான்
அங்கு இரண்டு அற்பு முன்னீர் அலை கடல் கலந்தது ஒத்தார் 22

**விசயை, சீவகன் முதலானோரைக் கண்டு பெருமகிழ்ச்சியுறல்**

திருவடி தொழுது வீழ்ந்த சிறுவனைக் கண்ட போழ்தே

வரு பனி சுமந்த வாள்கண் வனமுலை பொழிந்த தீம் பால்
முருகு உடை மார்பில் பாய்ந்து முழு மெயும் நனைப்ப மாதர்
வருக என் களிறு என்று ஏத்தி வாங்குபு தழுவிக் கொண்டாள் 23

காளையாம் பருவம் ஓராள் காதல் மீக் கூர்தலாலே
வாளையாம் நெடிய கண்ணாள் மகனை மார்பு ஒடுங்கப் புல்லித்
தாள் ஐயா முன்பு செய்த தவத்தது விளைவு இலாதேன்
தோள் அயாத் தீர்ந்தது என்றாள் தொழுதகு தெய்வம் அன்னாள் 24

வாள் திறல் குருசில் தன்னை வாள் அமர் அகத்துள் நீத்துக்
காட்டகத்து உம்மை நீத்த கயத்தியேற் காண வந்தீர்
சேட்டு இளம் பருதி மார்பின் சீவக சாமியீரே
ஊட்டு அரக்கு உண்ட செந் தாமரை அடி நோவ என்றாள் 25

**சீவகன் ஆறுதல் கூறுதல்**

கெடல் அருங் குரைய கொற்றம் கெடப் பிறந்ததுவும் அன்றி
நடலையுள் அடிகள் வைக நட்பு உடையவர்கள் நைய
இடை மகன் கொன்ற இன்னா மரத்தினேன் தந்த துன்பக்
கடல் அகத்து அழுந்த வேண்டா களைக இக் கவலை என்றான் 26

**சீவகனுக்குப் பெற்றோர்கள் கந்துக்கடன் சுநந்தையே என விசயை கூறல்**

யான் அலன் ஔவை ஆவாள் சுநந்தையே ஐயற்கு என்றும்
கோன் அலன் தந்தை கந்துக் கடன் எனக் குணத்தின் மிக்க
பால் நிலத்து உறையும் தீம் தேன் அனையவாய் அமிர்தம் ஊற
மான் நலம் கொண்ட நோக்கி மகன் மனம் மகிழச் சொன்னாள் 27

**எனக்கு மகன் நந்தட்டனே எனக் கூறல்**

எனக்கு உயிர்ச் சிறுவன் ஆவான் நந்தனே ஐயன் அல்லை
வனப்புடைக் குமரன் இங்கே வருக என மருங்கு சேர்த்திப்
புனக் கொடி மாலையோடு பூங் குழல் திருத்திப் போற்றார்
இனத்து இடை ஏறு அனானுக்கு இன் அளி விருந்து செய்தாள் 28

**விசயை, மைந்தர்களோடும், தோழர்களோடும் மகிழ்ச்சியாக இருத்தல்**

சிறகரால் பார்ப்புப் புல்லித் திரு மயில் இருந்ததே போல்
இறைவி தன் சிறுவர் தம்மை இரு கையினாலும் புல்லி
முறை முறை குமரர்க்கு எல்லாம் மொழி அமை முகமன் கூறி
அறு சுவை அமிர்தம் ஊட்டி அறுபகல் கழிந்த பின் நாள் 29

**விசயை மைந்தர்களுக்கும், தோழர்களுக்கும் அறிவுரை கூறுதல்**

மரவம் நாகம் மணம் கமழ் சண்பகம்
குரவம் கோங்கம் குடம் புரை காய் வழை
விரவு பூம் பொழில் வேறு இருந்து ஆய் பொருள்
உருவ மாதர் உரைக்கும் இது என்பவே 30

நலிவு இல் குன்றொடு காடு உறை நன்பொருள்

புலி அனார் மகள் கோடலும் பூமி மேல்
வலியின் மிக்கவர் தம் மகள் கோடலும்
நிலை கொள் மன்னர் வழக்கு என நேர்பவே 31

நீதியால் அறுத்து அந்நிதி ஈட்டுதல்
ஆதி ஆய அரும் பகை நாட்டுதல்
மோதி முள்ளொடு முள்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டடதே 32

ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண் எனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூது அரோ
கொற்றம் கொள் குறிக் கொற்றவற்கு என்பவே 33

வென்றி ஆக்கலும் மேதகவு ஆக்கலும்
அன்றியும் கல்வி யோடு அழகு ஆக்கலும்
குன்றி னார்களைக் குன்று என ஆக்கலும்
பொன் துஞ்சு ஆகத்தினாய் பொருள் செய்யுமே 34

பொன்னின் ஆகும் பொருபடை அப்படை
தன்னின் ஆகும் தரணி தரணியில்
பின்னை ஆகும் பெரும் பொருள் அப் பொருள்
துன்னும் காலைத் துன்னாதன இல்லையே 35

நிலத்தின் நீங்கி நிதியினும் தேய்ந்து நம்
குலத்தில் குன்றிய கொள் கையம் அல்லதூஉம்
கலைக் கணாளரும் இங்கு இல்லை காளை நீ
வலித்தது என் என வள்ளலும் கூறுவான் 36

**சீவகன் விசயைக்கு ஆறுதல் கூறுதல்**

எரியொடு நிகர்க்கும் ஆற்றல் இடிக் குரல் சிங்கம் ஆங்கு ஓர்
நரியொடு பொருவது என்றால் சூழ்ச்சி நல் துணையோடு என் ஆம்
பரிவொடு கவல வேண்டா பாம்பு அவன் கலுழன் ஆகும்
சொரி மதுச் சுரும்பு உண் கண்ணிச் சூழ் கழல் நந்தன் என்றான் 37

**விசயை மேலும் அறிவுரை கூறுதல்**

கெலுழனோ நந்தன் என்னாக் கிளர் ஒளி வனப்பினானைக்
கலுழத் தன் கையால் தீண்டிக் காதலின் களித்து நோக்கி
வலி கெழு வயிரத் தூண் போல் திரண்டு நீண்டு அமைந்த திண் தோள்
கலி கெழு நிலத்தைக் காவாது ஒழியுமோ காளைக்கு என்றாள் 38

இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும் அஞ்சார்
மடப்படல் இன்றிச் சூழும் மதி வல்லார்க்கு அரியது உண்டோ
கடத்து இடைக் காக்கை ஒன்றே ஆயிரம் கோடி கூகை
இடத்து இடை அழுங்கச் சென்று ஆங்கு இன் உயிர் செகுத்தது அன்றே- 39

இழை பொறை ஆற்ற கில்லாது இட்டிடை தளர நின்ற
குழை நிற முகத்தினார் போல் குறித்ததே துணிந்து செய்யார்
முழை உறை சிங்கம் பொங்கி முழங்கி மேல் பாய்ந்து மை தோய்
வழை உறை வனத்து வன்கண் நரி வலைப்பட்டது அன்றே 40

**பதுமுகன் கூறுதல்**

ஊழி வாய்த் தீயோடு ஒப்பான் பதுமுகன் உரைக்கும் ஒன்னார்
ஆழிவாய்த் துஞ்ச மற்று எம் ஆற்றலான் நெருங்கி வென்று
மாழை நீள் நிதியம் துஞ்சும் மாநிலக் கிழமை எய்தும்
பாழியால் பிறரை வேண்டேம் பணிப்பதே பாணி என்றான் 41

**பதுமுகன் அல்லாத மற்றத் தோழர்கள் கூறுதல்**

பொரு அருங் குரைய மைந்தர் பொம் என உரறி மற்று இத்
திரு இருந்து அகன்ற மார்பன் சேவடி சேர்ந்த யாங்கள்
எரி இருந்து அயரும் நீர்மை இரும் கதிர் ஏற்ற தெவ்வர்
வரு பனி இருளும் ஆக மதிக்க எம் அடிகள் என்றார் 42

**நின் மாமன் துணையைக் கொள்க எனச் சீவகனுக்கு விசயை கூறுதல்**

கார் தோன்றவே மலரும் முல்லை கமலம் வெய்யோன்
தேர் தோன்றவே மலரும் செம்மல் நின் மாமன் மற்று உன்
சீர் தோன்றவே மலரும் சென்று அவன் சொல்லி னோடே
பார் தோன்ற நின்ற பகையைச் செறற்பாலை என்றாள் 43

**சீவகன் தாயிடம் உறுதி கூறல்**

நன்று அப் பொருளே வலித்தேன் மற்று அடிகள் நாளைச்
சென்று அப் பதியுள் எமர்க்கே எனது உண்மை காட்டி
அன்றைப் பகலே அடியேன் வந்து அடைவல் நீமே
வென்றிக் களிற்றான் உழைச் செல்வது வேண்டும் என்றான் 44

**நூற்றைந்து தவ மக்ளிருடன் விசயைக் கோவிந்தன் நகருக்கு முன்னதாக அனுப்பிவிட்டு, சீவகன் ஏமாங்கத நாட்டுக்குச் சென்று சேர்தல்**

வேல் தைவந்து அன்ன நுதி வெம் பரல் கானம் உன்னி
நூற்று ஐவரோடு நடந்தாள் நுதி வல் வில் மைந்தன்
காற்றின் பரிக்கும் கலிமான் மிசைக் காவல் ஓம்பி
ஆற்றற்கு அமைந்த படையோடு அதர் முன்னினானே 45

மன்றற்கு இடன் ஆம் மணிமால் வரை மார்பன் வான் கண்
நின்று எத்திசையும் மருவிப் புனல் நீத்தம் ஓவாக்
குன்றும் குளிர் நீர்த் தடம் சூழ்ந்தன கோல யாறும்
சென்று அப் பழனப் படப்பைப் புனல் நாடு சேர்ந்தான் 46

காவின் மேல் கடிமலர் தெகிழ்ந்த நாற்றமும்

வாவியுள் இனமலர் உயிர்த்த வாசமும்
பூ விரி கோதையர் புனைந்த சாந்தமும்
ஏவலாற்கு எதிர் எதிர் விருந்து செய்தவே 47

கரும்பின் மேல் தொடுத்த தேன் கலிகொள் தாமரைச்
சுரும்பின் வாய்த் துளித்தலின் துவைத்த வண்டொடு
திருந்தி யாழ் முரல்வது ஓர் தெய்வப் பூம் பொழில்
பொருந்தினான் புனை மணிப் பொன் செய் பூணினான் 48

பொறை விலங்கு உயிர்த்தன பொன் செய் மா மணிச்
செறி கழல் இளைஞரும் செல்லல் நீங்கினார்
நறை விரி கோதையர் நாம வேலினாற்கு
அறு சுவை நால் வகை அமுதம் ஆக்கினார் 49

கட்டியின் அரிசியும் புழுக்கும் காணமும்
புட்டில் வாய்ச் செறித்தனர் புரவிக்கு அல்லவும்
நெட்டு இரும் கரும்பொடு செந் நெல் மேய்ந்து நீர்
பட்டன வள நிழல் பரிவு தீர்ந்தவே 50

குழி மதுக் குவளை அம் கண்ணி வார் குழல்
பிழி மதுக் கோதையார் பேண இன் அமுது
அழி மதக் களிறு அனான் அயின்ற பின்னரே
கழி மலர் விழித்த கண் கமலம் பட்டவே 51

எரி மணி இமைத்தன எழுந்த தீம் புகை
புரி நரம்பு இரங்கின புகன்ற தீங் குழல்
திரு மணி முழவமும் செம் பொன் பாண்டிலும்
அரு மணியின் குரல் அரவம் செய்தவே/ 52

தெளித்த இன் முறுவல் அம் பவளம் செற்ற வாய்க்
களிக் கயல் மழைக் கணார் காமம் காழ் கொளீஇ
விளித்த இன் அமிர்து உறழ் கீதம் வேனலான்
அளித்த பின் அமளி அம் சேக்கை எய்தினான் 53

தீங் கரும்பு அனுக்கிய திருந்து தோள்களும்
வீங்கு எழில் தோள்களும் மிடைந்து வெம் முலை
பூங் குளிர் தாரொடு பொருது பொன் உக
ஈங்கனம் கனை இருள் எல்லை நீந்தினான் 54

---------

**அலகு 2**

**1.கம்பராமாயணம் - குகப்படலம் ( கங்கை காண் படலம் )**

**இராமனை மீட்கப் புறப்பட்ட பரதன் சேனையோடு கங்கையின் கரையை அடைதல்**

பூ விரி பொலன் கழல் பொரு இல் தானையான்
காவிரிநாடு அன்ன கழனி நாடு ஒரீ இத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான். 1

**பரதனொடு சென்ற யானைச் சேனையின் வருணனை**

எண்ணரும் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம் கரி மதம் அத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையயும் உரித்து அன்று ஆயதே. 2

**குதிரைச் சேனையின் வருணனை**

அடி மிசைத் தூளி புக்கு அடைந்த தேவர்தம்
முடி உறப் பரந்தது; ஓர் முறைமை தேர்ந்திலேம்;
நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசைப் புரண்டவும் புரவி ஈட்டமே. 3

**காலாட்படையின் மிகுதி**

பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்று இல்லையால்;
மாலை ஏய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்தது அக் கங்கை வெள்ளமே. 4

**பரதன் பின் சென்ற படையின் அளவு**

கான்தலை நண்ணிய காளை பின் படர்
தோன்றலை அவ் வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள்
மூன்று பத்தாயிரத்து இரட்டி முற்றுமே. 5

**பரதன் சேனையோடு வருதலைக் கண்டு ஐயுற்று, குகன் தன் சேனையோடு கங்கையின் தென் கரையை அடைதல்**

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது ‘என்று எடுத்த சீற்றத்தான். 6

குகன் எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிகக் கண்கள் தீ நாற நாசியில்
புகை உறக் குனிப்புறும் புருவப் போர் விலான். 7

மை உற உயிர் எலாம் இறுதி வாங்குவான்
கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ யைந்நூறாயிரம் உருவம் ஆயின
மெய் உறு தானையான் வில்லின் கல்வியான். 8

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டியது அமர் ‘எனக் கிளரும் தோளினான். 9

‘எலி எலாம் இப்படை; அரவம் யான் ‘என
ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்;
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழி புகுந்த போலவே. 10

மருங்கு அடை தனெ் கரை வந்து தோன்றினான்;
ஒருங்கு அடை நெடும் படை ஒல் என் ஆர்ப்பினோடு
அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை
கருங்கடல் கிளர்ந்து என கலந்து சூழவே. 11

**குகன் தன் படையினர்க்கு இட்ட கட்டளை**

தோன்றிய புளிஞரை நோக்கிச் ‘சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென்; என் உயிர் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு; நீர் அமைதிர் ஆம் ‘என்றான். 12

“துடி எறி; நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடி எறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடி எறி; கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி; எறி பட “ எனப் பெயர்த்தும் கூறுவான். 13

**தன்னினத்தவரான வேடர் முன் கூறல்**

அஞ்சன வண்ணன், என் ஆர் உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின், “நாய் குகன் “ என்று எனை ஓதாரோ? 14

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
’ஏழைமை வேடன் இறந்திலன் ‘ என்று, எனை ஏசாரோ? 15

முன்னவன் என்று நினைந்திலன்; மொய் புலி அன்னான், ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்; அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும் சரம் வாயாவோ? 16

பாவமும் நின்ற பெரும்பழியும் பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?
ஆ! அது போக! என் ஆர் உயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது, சேனையும் ஆர் உயிரும் கொடு போயன்றோ? 17

அருந்தவம் என் துணை ஆள, இவன் புவி ஆள்வானோ?
மருந்து எனின் அன்று உயிர்; வண் புகழ் கொண்டு பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதோ
இருந்ததும் நன்று கழிக்குவென் என்கடன் இன்றோடே. 18

தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பு இயல் தார் இவர் வாள் வலி கங்கை கடந்து அன்றோ?
வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ
நம்பி முன்னே இனி நம் உயிர் மாய்வது நன்று அன்றோ? 19

போன படைத் தலை வீரர் தமக்கு இரை போதா இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரின், சிலை மா மேகம்
சோனை படக் குடர் சூறை பட சுடர் வாளோடும்
தானை படத் தனி யானை படத் திரள் சாயேனோ. 20

நின்ற கொடைக் கை என் அன்பன் உடுக்க, நெடுஞ் சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம் கொள் பிணக் குவை கொண்டு ஓடித்
துன்று திரைக் கடல், கங்கை மடுத்து இடை தூராதோ? 21

“ஆடு கொடிப் படை சாடி, அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது, பார் ‘‘ எனும் இப் புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி, எடுத்தது காணீரோ? 22

மா முனிவர்க்கு உறவு ஆகி, வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று, மனத்து இறை கொள்ளாதே,
ஏ முனை உற்றிடில், ஏழு கடல் படை என்றாலும்
ஆ முனையின் சிறு கூழ் என இப்பொழுது ஆகாதோ? 23

**சுமந்திரன் பரதனிடம் குகன் தன்மை சொல்லல்**

என்பன சொல்லி, இரும்பு அன மேனியர் ஏனோர் முன்
வன் பணை வில்லினன், மல் உயர் தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன்; நின்றது கண்டு, அரி ஏறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன் மூரிய தேர் வல்லான். 24

“கங்கை இருகரை உடையான், கணக்கு இறந்த நாவாயான்,
உங்கள் குலத் தனி நாதற்கு உயிர் துணைவன், உயர் தோளான்,
வெம் கரியின் ஏறு அனையான், வில் பிடித்த வேலையினான்,
கொங்கு அலரும் நறும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான் ‘‘ 25

“கல் காணும் திண்மையான், கரை காணாக் காதலான்,
அல் காணில் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான்,
மல் காணும் திரு நெடுந்தோள் மழை காணும் மணி நிறத்தாய்!
நின் காணும் உள்ளத்தான், நெறி எதிர் நின்றனன் ‘‘ என்றான். 26

**பரதன் குகனைக் காண விரைதல்**

தன்முன்னே, அவன் தன்மை தன் துணைவன் முந்து உரைத்த
சொல் முன்னே உவக்கின்ற துரிசு இலாத் திரு மனத்தான்,
'மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கு இனிய துணைவனேல்,
என் முன்னே; அவற் காண்பென் யானே சென்று 'என எழுந்தான். 27

**பரதன் தோற்றம் கண்ட குகன் நிலையும் செயலும்**

என்று எழுந்து தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்று எழுந்து சென்றது எனக் குளிர் கங்கைக் கரை குறுகி
நின்றவனை நோக்கினான், திருமேனி நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங்குஞ்சி எயினர்கோன் துண் என்றான். 28

வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நல் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண் உற்றான்,
வில் கையின் நின்று இடைவீழ, விம்முற்று நின்று ஒழிந்தான். 29

"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவம் வேடம் தலைநின்றான்;
துன்பம் ஒரு முடிவு இல்லை; திசை நோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?" என்றான். 30

"உண்டு இடுக்கண் ஒன்று; உடையான், உலையாத அன்புடையான்
கொண்ட தவவேடமே கொண்டிருந்தான்; குறிப்பு எல்லாம்
கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்; காமின்கள் நெறி; " என்னாத்
தண் துறை ஓர் நாவாயில் ஒரு தனியே தான் வந்தான். 31

**பரதன் வணங்கக் குகன் தழுவுதல்**

வந்து, எதிரே தொழுதானை வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும் அவனும், அவனடி வீழ்ந்தான்;
தந்தையினும் களி கூரத் தழுவினான், தகவு உடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான். 32

**குகன் வினாவும் பரதன் கூறும் விடையும்**

தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை
'எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை? 'என்ன,
'முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையில் நின்றும்
வழுவினன், அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் 'என்றான். 33

**பரதன்பால் தீதின்மை கண்ட குகன் வணங்கிக் கூறல்**

கேட்டனன் கிராதர் வேந்தன்; கிளர்ந்து எழும் உயிரன் ஆகி,
மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்; விம்மினன், உவகை வீங்கத்

தீட்ட அரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய் இல் உள்ளத்தன் புகலல் உற்றான். 34
தாய் உரை கொண்டு, தாதை உதவிய தரணி தன்னைத்
தீ வினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ? தெரியின் அம்மா! 35

என் புகழ்கின்றது ஏழை எயினனேன்? இரவி என்பான்
தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல,
மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர் குணத்து உரவு தோளாய்! 36

**பரதன்பால் குகன் ஒப்பற்ற அன்பு கொள்ளுதல்**

என இவை அன்ன மாற்றம் இவைவன பலவும் கூறிப்
புனை கழல் புலவு வேல் கைப் புளிஞர் கோன் பொரு இல் காதல்
அனையவற்கு அமைவில் செய்தான்; ஆர் அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அருங்குணம் கொடு அன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல். 37

**இராமன் பள்ளிகொண்ட புறப்படுக்கையை பரதனுக்குக் குகன் காட்டுதல்**

அவ் வழி அவனை நோக்கி, அருள் தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்து அண்ணல், தன் திசைச் செங்கை கூப்பி,
‘எவ்வழி உறைந்தான் நம் முன்? ’ என்றலும், எயினர் வேந்தன்,
‘இவ்வழி வீர! யானே காட்டுவல்; எழுக ‘என்றான். 38

**இராமன் பள்ளிகொண்ட இடம் கண்ட பரதனுடையசெயலும் சொல்லும்**

கார் எனக் கடிது சென்றான்; கல் இடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்;
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரல் பரவை புக்கான்.
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான். 39

இயன்றது என் பொருட்டினால் இவ் இடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும் அமுது என, அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்; சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே. 40

**பரதன் இலக்குவன் இரவை எங்கே கழித்தான்? எனக் குகன் கூறல்**

தூண் தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான், ‘அந்
நீண்டவன் துயின்ற சூழல் இது எனில், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு? ‘என இனிது கேட்டான்; எயினர் கோன் இதனைச் சொன்னான். 41
‘அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும் வெய்து உயிர்ப்போடும் வீரன்,
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்; இமைப்பு இலன் நயனம் ‘என்றான். 42

**பரதன் இலக்குவன் நிலை கண்டு பாராட்டுதலும் தன் நிலை கண்டு நொந்து கூறலும்**

என்பத்தைக் கேட்ட மைந்தன், "‘இராமனுக்கு இளையார் ‘என்று

முன்பு ஒத்த தோற்றத் தேம் இல், யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்; அவன் அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது என் அடிமை ' ' என்றான். 43

**பரதன் கங்கை கடத்துவிக்குமாறு குகன்பால் வேண்டுதல்**

அவ் இடை, அண்ணல் தானும், அன்று அரும் பொடியின் வைகித்
'தவெ் இடைதர நின்று ஆர்க்கும் செறி கழல் புளிஞர் கோமாஅன்!
இவ்விடைக் கங்கை யாற்றின் ஏற்றினை ஆயின், எம்மை
வெவ் இடர் கடல் நின்று ஏற்றி, வேந்தன்பால் விடுத்தது 'என்றான். 44

**குகன் கட்டளையால் நாவாய்கள் வருதல்**

'நன்று 'எனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை; 'நாவாய்
சென்று இனி தருதிர் 'என்ன, வந்தன; சிவன் சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கும் அம்பொற் குவடு எனக் குபேரன் மானம்
ஒன்று என நாணிப் பல வேறு உருவு கொண்டனைய ஆன. 45

நங்கையர் நடையின் அன்னம் நாண் உறு செலவின் நாவாய்,
கங்கையும் இடம் இலாமை, மிடைந்தன கலந்த எங்கும்;
அங்கொடு இங்கு இழித்தி ஏற்றும் அமைதியின் அமரர் வையத்து
இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இரு வினை என்னல் ஆன. 46

**குகன் நாவாய்கள் வந்தமை கூற, அவற்றில் படைகளை ஏற்றும்படி பரதன் சுமந்திரனிடம் சொல்லுதல்**

'வந்தன வரம்பு இல் நாவாய்; வரி சிலை குரிசில் மைந்த!
சிந்தனை யாவது? 'என்று சிருங்கிபேரியர் கோன் செப்பச்
சுந்தர வரி விலானும் சுமந்திரன் தன்னை நோக்கி,
'எந்தை! இத் தானை தன்னை ஏற்றுதி, விரைவின் 'என்றான். 47

**படைகள் கங்கையைக் கடத்தல்**

குரிசிலது ஏவலால் அக் குரகதத் தேர் வலானும்
வரிசையின் வழாமை நோக்கி, மரபு உளி வகையின் ஏற்றக்
கரி பரி இரதம் காலாள் கணக்கு அறு கரையில் வேலை
எரி மணி திரையின் வீசும் கங்கை ஆறு ஏறிற்று அன்றே. 48

**யானைகள் கங்கையை நீந்திக் கடத்தல்**

இடி படு முழக்கம் பொங்க, இன மழை மகர நீரை
முடிவு உற முகப்ப, ஊழி இறுதியில் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலைக் கூம்பு ஒடு படர்வ போல
நெடிய கை எடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம். 49

சங்கமும் மகர மீனும் தரளமும் மணியும் தள்ளி,
வங்கம் நீர் கடலும் வந்து தன் வழிப் படர, மானப்
பொங்கு வெம் களிறு நூக்கக் கரை ஓரீ இப் போயிற்று; அம்மா!
கங்கையும் இராமற் காணும் காதலது என்ன மாதோ. 50

**தேர் உறுப்புக்கள் நாவாயில் அக்கரை சேர்தல்**

கொடிஞ்சொடு தட்டும் அச்சும் ஆழியும் கோத்த மொட்டும்
நெடுஞ் சுவர் கொடியும் யாவும் நெறி வரும் முறையின் நீக்கி,
விடும் சுவல் புரவியோடும் வேறு வேறு ஏற்றிச் சென்ற

மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை என வயிரத் தேர்கள். 51

**குதிரைகள் நாவாய் மீது அக்கரை சேர்தல்**

நால் இரண்டு ஆய கோடி நவை இல் நாவாய்கள் மீதாச்
சேல் திரண்டனைய ஆய கதியொடு நிமிரச் சென்ற;
பால் திரண்டனைய மெய்ய, பயம் திரண்டனைய நெஞ்ச,
கால் திரண்டனைய கால, கடுநடைக் கலினப் பாய்மா. 52

பொலம் குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று தாக்க,
மலங்கினர், இரண்டு பாலும் மறுகினர், வெருவி நோக்க,
அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர, அங்கும் இங்கும்
கலங்கின வெருவிப் பாயும் கயல் குலம் நிகர்த்த கண்கள். 53

**முனிவர் வான்வழிச் சென்று கங்கையினைக் கடத்தல்**

மை அறு விசும்பில் மண்ணில் மற்றும் ஓர் உலகில் முற்றும்
மெய் வினை தவமே; அன்றி, மேலும் ஒன்று உளதோ? கீழோர்
செய்வினை நாவாய் ஏறித் தீண்டலர், மனத்தில் செல்லும்
மொய் விசும்பு ஓடம் ஆகத் தேவரின் முனிவர் போனார். 54

**படை யாவும் நகர மக்கள் அனைவரும் கங்கை கடந்தமை**

‘அறுபதினாயிரம் அக்குரோணி ‘என்று
இறுதி செய் சேனையும் எல்லை தீர் நகர்
மறு அறு மாந்தரும் மகளிர் வெள்ளமும்
செறி திரைக் கங்கை பின் கிடக்கச் சென்றவே. 55

**பரதன் நாவாயில் ஏறுதல்**

சுழித்து நீர் வரு துறை ஆற்றைச் சூழ் படை
கழித்து நீங்கியது எனக் கள்ள ஆசையை
அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான். 56

தன்னன தம்பியுந் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனுந் தூய தோழனும்
துன்னின ரேறலுந் துழாது டுப்பெனும்
நன்னயக் காலினா நடத்தன் மேயினான் 57

**பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகமாக்குதல்**

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கிக்
’கொற்றத் தார்க் குரிசில்! இவர் ஆர்? ‘என்று குகன் வினவக் ‘கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி, மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள் ‘என்றான். 58

**பரதன் கோசலைக்குக் குகனை அறிமுகமாக்குதல்**

என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து அழுவானை, “இவன் யார் “ என்று
கன்று பிரி காராவின் துயர் உடைய கொடி வினவக் கழல் கால் மைந்தன்
இன் துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்;
குன்று அனைய திரு நெடுந்தோள் குகன் என்பான், இந்நின்ற குரிசில் என்றான். 59

**கோசலை கூறிய வாழ்த்துரை**

நைவீர் அலீர் மைந்தீர்! இனித் துயரால் நாடு இறந்து காடு நோக்கி

மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று ஆம் அன்றே? விலங்கல் திண் தோள்
கை வீரக் களிறு அனைய காளை இவன் தன்னோடு கலந்து நீங்கள்
ஐவீரும் ஒருவீராய், அகல் இடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள். 60

**சுமித்திரையை அறிவித்தல்**

அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை நோக்கி, 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை 'என்ன, "நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பது ஆக்கி,
இறந்தான் தன் இளந்தேவி, யாவர்க்கும் தொழுகுலம் ஆம் 'இராமன் பின்பு
பிறந்தானும் உளன் 'என்னப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள் ' ' என்றான்.61

**குகன் கைகேயியைச் சுட்டி, இவர் யார்? என்று வினவுதல்**

சுடும் மயானத்து இடைத் தன் துணை ஏகத் தோன்றல் துயர்க் கடலின் ஏகக்,
கடுமை ஆர் கானகத்து இடைக் கருணை ஆர் கலி ஏகக் கழல் கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம் தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை ' ' 'யார் இவர்? 'என்று உரை ' ' என்னக் குரிசில் கூறும்.62

**பரதன் குகனுக்குக் கைகேயியை அறிமுகமாக்குதல்**

படர் எலாம் படைத்தாளைப் பழி வளர்க்கும் செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்து தேய,
உடர் எலாம், 'உயிர் இலா எனத் தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல் இந் நின்றாள் என்னை ஈன்றாள். 63

**பரதன் ஏறிய ஓடம் தென்கரை அடைதல்**

என்னக் கேட்டு அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன் தாய் என;
அன்னப் பேடை சிறை இலதாய்க் கரை
துன்னிற்று என்னவும் வந்தது தோணியே. 64

## 2. பெரியபுராணம் -அப்பூதியடிகள் நாயனார் புராணம்

1. தாண்டவம் புரிய வல்ல தம்பிரானாருக்கு அன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்ட சீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண் தகு காதல் கூரக் கலந்த அன்பினராய் உள்ளார்

2. களவு பொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளம் மிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப் பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆ வொடு மேதி மற்றும்
உள எலாம் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுகல் ஆற்றார்

3. வடிவு தாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டவர் நாமத்தால்
படி நிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவு இலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்

4. பொருப்பரையன் மடப் பிடியின் உடன் புணரும் சிவக்களிற்றின்

திருப் பழனம் பணிந்து பணி செய் திருநாவுக்கு அரசர்
ஒருப் படு காதலில் பிறவும் உடையவர் தம்பதி வணங்கும்
விருப்பினொடும் திங்களூர் மருங்கு வழி மேவுவார்

5. அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் அருள் உடையார்
உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனில் பரிவு அகற்றிக்
குளம் நிறைந்த நீர்த் தடம் போல் குளிர் தூங்கும் பரப்பினதாய்
வளம் மருவும் நிழல் தரு தண்ணீர்ப் பந்தர் வந்து அணைந்தார்

6. வந்து அனைந்த வாகீசர் மந்த மாருத சீதப்
பந்தர் உடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்து அருளிச்
சிந்தை வியப்புற வருவார் திருநாவுக்கரசெனும் பேர்
சந்தம் உற வரைந்து அதனை எம் மருங்கும் தாம் கண்டார்

7. இப் பந்தர் இப் பெயர் இட்டு இங்கு அமைத்தார் யார் என்றார்க்கு
அப் பந்தர் அறிந்தார்கள் ஆண்ட அரசு எனும் பெயரால்
செப்பருஞ் சீர் அப்பூதி அடிகளார் செய்து அமைத்தார்
தப்பு இன்றி எங்கும் உள சாலை குளம் கா என்றார்

8. என்று உரைக்க அரசு கேட்டு இதற்கு என்னோ கருத்து என்று
நின்ற வரை நோக்கி அவர் எவ்விடத்தார் என வினவத்
துன்றிய நூல் மார்பரும் இத் தொல் பதியார் மனையின் கண்
சென்றனர் இப்பொழுது அதுவும் சேய்த்து அன்று நணித்து என்றார்

9. அங்கு அகன்று முனிவரும் போய் அப்பூதி அடிகளார்
தங்கும் மனைக் கடைத் தலை முன் சார்வாக உள் இருந்த
திங்களூர் மறைத் தலைவர் செழும் கடையில் வந்து அடைந்தார்
நங்கள் பிரான் தமர் ஒருவர் எனக் கேட்டு நண்ணினார்

10. கடிது அணைந்து வாகீசர் கழல் பணிய மற்று அவர் தம்
அடி பணியா முன் பணியும் அரசின் எதிர் அந்தணனார்
முடிவில் தவம் செய்தேன் கொல் முன்பு ஒழியும் கருணை புரி
வடிவுடையீர் என் மனையில் வந்து அருளிற்று என் என்றார்

11. ஒரு குன்ற வில்லாரைத் திருப் பழனத்துள் இறைஞ்சி
வருகின்றோம் வழிக் கரையில் நீர் வைத்த வாய்ந்த வளம்
தருகின்ற நிழல் தண்ணீர்ப் பந்தரும் கண்ட அத் தகைமை
புரிகின்ற அறம் பிறவும் கேட்டு அணைந்தோம் எனப் புகல்வார்

12. ஆறணியும் சடை முடியார் அடியார்க்கு நீர் வைத்த
ஈறில் தண்ணீர்ப் பந்தரில் நும் பேர் எழுதாதே
வேறு ஒரு பேர் முன் எழுத வேண்டிய காரணம் என் கொல்
கூறும் என எதிர் மொழிந்தார் கோதில் மொழிக் கொற்றவனார்

13. நின்ற மறையோர் கேளா நிலை அழிந்த சிந்தையராய்
நன்று அருளிச் செய்து இலீர் நாணில் அமண் பதகர் உடன்
ஒன்றிய மன்னவன் சூட்சி திருத் தொண்டின் உறைப் பாலே

வென்றவர் தம் திருப்பேரோ வேறு ஒரு பேர் என வெகுள்வார்

14. நம்மை உடையவர் கழல் கீழ் நயந்த திருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பது என என் போல் வாரும் தெளியச்
செம்மை புரி திருநாவுக்கரசர் திருப் பெயர் எழுத
வெம்மை மொழி யான் கேட்க விளம்பினீர் என விளம்பி

15. பொங்கு கடல் கல் மிதப்பில் போந்து ஏறும் அவர் பெருமை
அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யார் உளரே
மங்கலம் ஆம் திரு வேடத்துடன் இன்று இவ்வகை மொழிந்தீர்
எங்கு உறைவீர் நீர் தாம் யார் இயம்பும் என இயம்பினார்

16. திரு மறையோர் அது மொழியத் திரு நாவுக்கரசர் அவர்
பெருமை அறிந்து உரை செய்வார் பிற துறையின் நின்றேற
அருளும் பெரும் சூலையினால் ஆட் கொள்ள அடைந்து உய்ந்த
தெருளும் உணர்வு இல்லாத சிறுமை யேன் யான் என்றார்

17. அரசு அறிய உரை செய்ய அப்பூதி அடிகள் தாம்
கர கமலம் மிசை குவியக் கண் அருவி பொழிந்து இழிய
உரை குழறி உடம்பு எல்லாம் உரோம புளகம் பொலியத்
தரையின் மிசை வீழ்ந்தவர் தம் சரண கமலம் பூண்டார்

18. மற்றவரை எதிர் வணங்கி வாகீசர் எடுத்து அருள
அற்றவர்கள் அரு நிதியம் பெற்றார் போல் அரு மறையோர்
முற்றவும் களி கூற முன் நின்று கூத்தாடி
உற்ற விருப்பு உடன் சூழ ஓடினார் பாடினார்

19. மூண்ட பெரு மகிழ்ச்சியினால் முன் செய்வது அறியாதே
ஈண்ட மனை அகத்து எய்தி இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்ட அரசு எழுந்து அருளும் ஓகை உரைத்து ஆர்வம் உறப்
பூண்ட பெரும் சுற்றம் எலாம் கொடு மீளப் புறப்பட்டார்

20. மனைவியார் உடன் மக்கள் மற்றும் உள்ள சுற்றத்தோர்
அனைவரையும் கொண்டு இறைஞ்சி ஆராத காதல் உடன்
முனைவரை உள் எழுந்து அருளுவித்து அவர் தாள் முன் விளக்கும்
புனை மலர் நீர் தங்கள் மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்

21. ஆசனத்தில் பூசனைகள் அமர் வித்து விருப்பின் உடன்
வாசம் நிறை திரு நீற்றுக் காப்பு ஏந்தி மனம் தழைப்பத்
தேசம் உய்ய வந்த வரைத் திரு அமுது செய்விக்கும்
நேசம் உற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார்

22. செய்தவர் இசைந்த போது திரு மனையாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே என்று
மை திகழ் மிடற்றினான் தன் அருளினால் வந்தது என்றே

உய்தும் என்று உவந்து கொண்டு திரு அமுது ஆக்கல் உற்றார்

23. தூய நல் கறிகள் ஆன அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆய இன் அமுதும் ஆக்கி அமுது செய்து அருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக்கு அரசை வாழை
மேய பொன் குருத்துக் கொண்டுவா என விரைந்து விட்டார்

24. நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செயப் பெற்றேன் என்று
ஒல்லையில் விரைந்து தோட்டத்துள் புக்குப் பெரிய வாழை
மல்லல் அம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள் அரா ஒன்று
அல்லல் உற்று அழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற்று அன்றே

25. கையினில் கவர்ந்து சுற்றிக் கண் எரி காந்துகின்ற
பை அரா உதறி வீழ்த்துப் பதைப்பு உடன் பாந்தாள் பற்றும்
வெய்ய வேகத்தால் வீழா முன்னம் வேகத்தால் எய்திக்
கொய்த இக் குருத்தைச் சென்று கொடுப்பன் என்று ஓடி வந்தான்

26. பொருந்திய விட வேகத்தில் போதுவான் வேகம் உந்த
வருந்தியே அணையும் போழ்து மாசுணம் கவர்ந்தது யார்க்கும்
அரும் தவர் அமுது செய்யத் தாழ்க்க யான் அறையேன் என்று
திருந்திய கருத்தினோடும் செழுமனை சென்று புக்கான்

27. எரிவிடம் முறையே ஏறித் தலைக் கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக் கொண்டு மயங்கி வீழ்வான்
பரி கலக் குருத்தைத் தாயார் பால் வைத்துப் படி மேல் வீழ்ந்தான்

28. தளர்ந்து வீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீழ்ந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்வதற்குச் சூழ்வார்

29. பெறல் அரும் புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து மூடிப்
புற மனை முன்றில் பாங்கு ஓர் புடையினில் மறைத்து வைத்தே
அற இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று
விறல் உடைத் தொண்டனார் பால் விருப்பொடு விரைந்து வந்தார்

30. கடிது வந்து அமுது செய்யக் காலம் தாழ்கின்றது என்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகு உற அணைய வைத்துப்
படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து எழுந்து அமுது செய்து எம்
குடி முழுதும் உய்யக் கொள்வீர் என்று அவர் கூறக் கேட்டு

31. அரும் தவர் எழுந்து செய்ய அடி இணை விளக்கி வேறு ஓர்
திருந்தும் ஆசனத்தில் ஏறிப் பரிகலம் திருத்தும் முன்னர்
இருந்து வெண் நீறு சாத்தி இயல்புடை இருவருக்கும்

பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்

32. ஆதி நான்மறை நூல் வாய்மை அப்பூதியாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும் ஒன்று உரையார் இப்போது இங்கு அவன் உதவான் என்றார்

33. அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திரு உள்ளத்து ஓர் தடு மாற்றம் சேர நோக்கி
இவ் உரை பொறாது என் உள்ளம் என்று என் செய்தான் இதற்கு ஒன்று உண்டால்
மெய் விரித்து உரையும் என்ன விளம்புவார் விதிர்ப்பு உற்று அஞ்சி

34. பெரியவர் அமுது செய்யும் பேறு இது பிழைக்க என்னோ
வருவது என்று உரையார் ஏனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டும் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார் அன்றே

35. நாவினுக்கு அரசர் கேளா நன்று நீர் புரிந்த வண்ணம்
யாவர் இத் தன்மை செய்தார் என்று முன் எழுந்து சென்றே
ஆவி தீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பா இசைப் பதிகம் பாடிப் பணி விடம் பாற்று வித்தார்

36. தீ விடம் நீங்க உய்ந்த திரு மறையவர் தம் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுவானைப் போன்று
சேவுகைத்தவர் ஆட் கொண்ட திருநாவுக்கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனித நீறு அளித்தார் அன்றே

37. பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்ற அப் பயந்தார் தாங்கள்
அறிவரும் பெருமை அன்பர் அமுது செய்து அருளுதற்குச்
சிறிது இடையூறு செய்தான் இவன் என்று சிந்தை நொந்தார்

38. ஆங்கவர் வாட்டம் தன்னை அறிந்து சொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுது செய்து அருள உற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில் மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடும் தகுவன சமைத்துச் சார்வார்

39. புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்த வான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்த அக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின் வைத்தார்

40. திருந்திய வாச நல் நீர் அளித்திட திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைகள் உடனே நோக்கி
அரும் புதல்வர்களும் நீரும் அமுது செய்வீர் இங்கு என்ன

விரும்பிய உள்ளத்தோடு மேலவர் ஏவல் செய்வார்

41. மைந்தரும் மறையோர் தாமும் மருங்கு இருந்து அமுது செய்யச்
சிந்தை மிக்கு இல்ல மாதர் திரு அமுது எடுத்து நல்கக்
கொந்து அவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியாரோடும்
அம் தமிழ் ஆளியார் அங்கு அமுது செய்து அருளினாரே

42. மா தவ மறையோர் செல்வ மனை இடை அமுது செய்து
காதல் நண்பு அளித்துப் பல் நாள் கலந்து உடன் இருந்த பின்றை
மே தகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர் தம் பாதம் சேர்ந்து நல் தமிழ்ப் பதிகம் செய்வார்

43. அப்பூதி அடிகளார் தம் அடிமையைச் சிறப்பித்து ஆன்ற
மெய்ப் பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொல் மாலை வேய்ந்த
இப் பூதி பெற்ற நல்லோர் எல்லை இல் அன்பால் என்றும்
செப்பு ஊதியம் கைக் கொண்டார் திருநாவுக்கரசர் பாதம்

44. இவ் வகை அரசின் நாமம் ஏத்தி எப் பொருளும் நாளும்
அவ்வரும் தவர் பொன் தாளை என உணர்ந்து அடைவார் செல்லும்
செவ்விய நெறியது ஆகத் திருத் தில்லை மன்றுள் ஆடும்
நவ்வியம் கண்ணாள் பங்கர் நல் கழல் நண்ணினாரே

### 3.**தேம்பாவணி - வளன் சனித்த படலம்**

தாவீது மன்னன்சிறப்பு

அன்ன மா திரு நகர் அகத்து, உடற்கு உயிர்
என்ன, மா தாவிதன் இனிதில் வீற்றிருந்து,
ஒன்னலார் வெரு உற, உவந்து பாவலர்
சொன்ன பா நிகரும் மேல் துளங்கினான் அரோ. 1

அருளொடு வீங்கிய அகத்தினான்; துளி
மருளொடு வீங்கிய மழைக் கையான்; மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினான்;
பொருளொடு வீங்கிய பொறைப் புயத்தினான். 2

ஒளி தவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்;
அளி தவழ் நிழல் செயும் அருட் குடையினான்;
வெளி தவழ் நவ மணி விழுங்கும் தேரினான்;
களி தவழ் மதம் பொழி களிற்றின் ஆண்மையான். 3

மொய் முனர்ப் பின்று இலா முரண் கொடு ஏறு எனா,
மெய் முனர்ப் பொய் என வெருவு ஒன்னார் இவன்
கை முனர் நிற்கு இலாக் கலங்கிப் போற்றும், போர்
செய் முனர் செயம் செயும் சிங்க வாகையான். 4

வேல் செயும் போரினால் வெலப்படான்; தனைச்
சால் செயும் தவத்தினால் வென்ற தன்மையான்;

சேல் செயும் புணரி சூழ் செகத்தில் நின்று, ஒளி
மேல் செயும் வானவர் விழைந்த பான்மையான். 5

நீதி நல் முறை எலாம் நிறைந்த நீள் தவம்,
ஆதி தன் மறை இவை அனைத்தும் மேல் படர்
கோது இல் நன் உதவி செய் கொழுகொம்பு ஆகி, வான்
ஏது இல் நல் முறை இவண் இசைந்த மாட்சியான். 6

கோல் நலம் கோடு இலா நிறுவிக் கூர்த்தலால்,
நூல் நலம் பொருள் நலம் அறத்தின் நுண் நலம்
தேன் நலம் இனிதினில் திளைந்து, நாடு எலாம்
மீன் நலம் பயின்ற வான் வியப்ப வாழ்ந்ததே. 7

பகை செய்வார்க்கு இடி என, படிந்து போற்றிய
தகை செய்வார்க்கு அமுது என நாமத் தன்மையான்,
நகை செய்வார்க்கு, இளவலாய், நடத்தும் வேல் இலான்,
மிகை செய்வான்; ஆண்மையை விளம்பல் நன்று அரோ. 8

**தாவீதின் இளமைப்பருவம் - சவூல் அரசனைப் பீலித்தேயர் எதிர்த்தல்**

மறை வழங்கிய வளம் கொள் நாட்டு இடை சவூல் ஆண்ட
முறை வழங்கிய கால், மறை பகைத்தனர், முகில் நின்று
உறை வழங்கிய ஒப்பு எனச் சர மழை வழங்கி,
பொறை வழங்கிய பிலித்தையர், போர் செய எதிர்த்தார். 9

**பீலித்தேயருள் இராக்கதன்**

வேலியால் கது விடாத் திரு நகர் எலாம் நடுங்க,
மாலியால் கதிர் வகுத்த வாள் ஏந்தினர் நாப்பண்,
ஆலியால் கரிந்து அகல் முகில் உருக்கொடு வேய்ந்த
கோலியாற்று எனும் கொடியது ஓர் இராக்கதன் எதிர்த்தான். 10

**கோலியாற்றின்தோற்றம்**

துளி சிறைச் செயும் முகில் புகும் இரு மலை சுமந்த
ஒளி சிறைச் செயும் ஒரு கரும் பருவதம் என்னா
வெளி சிறைச் செயும் வியன் இரு புயத்து மேல் சிரமே,
களி சிறைச் செயும் கதம் கொடு வெரு உறத் தோன்றும். 11

நீண்ட வாள் புடை நெருங்கியே, படர் கரு முகில்போல்,
மாண்ட தோள் வியன் வட்டமே பொறுத்து, வெஞ் சுடரைத்
தூண்டல் ஆம் எனச் சுளித்த நீள் ஈட்டி கை தாங்கி,
கீண்டு அளாவு அழல் விழிவழி கிளர்ப்ப விட்டு எதிர்ந்தான். 12

**கோலியாற்றின் கோபவுரை**

பெருக்கு வீங்கிய பெரும் புனல் அலை சுருட்டு அன்ன,
எருக்கு வீங்கிய இழிவு உகு நெஞ்சு இடை அடங்காச்
செருக்கு வீங்கிய இராக்கதன் எரி எழச் சினந்து,
தருக்கு வீங்கிய சல உரை இடி என இடிப்பான். 13

“கூர்த்த போர் செயக் கூடினர்க்கு ஒருவன் வந்து எய்தி,
சீர்த்த நான் அவன் சிறந்த போர் தனித் தனித் தாக்க,
தோர்த்த பாங்கினர் தொழும்பர் என்று ஆகுவர் “, என்னா,
ஆர்த்த ஓகையான் நகைத்து, இகழ்வு அறைந்து அறைந்து அழைப்பான். 14

**கண்டவர்மருட்சி**

பெரிய குன்றமோ பேய் அதோ பூதமோ யாதோ
உரியது ஒன்று இலா உருவினைக் கண்டு உளி வெருவி,
கரிய விண் இடி கதத்த மின் கொடு விடுத்து அன்ன
அரிய கோலியாற்று அறைந்த சொல் கேட்டனர் மருண்டார். 15

**கோலியாற்றின்அகந்தை நகைப்பு**

நல் நெடும் படை நடுக்கு உறீஇ வெருவிய தன்மை
கல் நெடுங் குவடு ஒத்தனன் செருக்கு எழக் கடுத்து,
பல் நெடும் பகல் பரமனைப் பகைப்பவும், இகழ்ந்த
சொல் நெடும் பகை தொடர்ந்தனன் எவரையும் நகைப்பான். 16

**சவூல்அரசன்அறிக்கை**

தாங்குவார் இலா, சாற்றிய உரைகள் கேட்டு எவரும்
நீங்குவார் என, நிருபனும் அயரு தன் நெஞ்சிற்கு
ஏங்குவான்: “எவன் எதிர்ந்த அவ் அரக்கனை வென்றால்,
ஆங்கு நான் அவற்கு என் மகள் அளிக்குவேன் “ என்பான். 17

**வீர இளைஞன் தாவீதன்**

இன்னவாய்ப் பகல் நாற்பதும் இரிந்த பின், அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர், அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்து இள தாவிதன் எய்தி,
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலும் கேட்டான். 18

**தாவீதன் இரசவேலரிடம் வீரமொழி விளம்பல்**

கேட்ட வாசகம் கிளர் திற நெஞ்சு இடத்து எரியை
ஈட்டல் ஆம் என எழுந்து, “உளம் நினைந்தவை ஆக்கிக்
காட்ட, வாய்மையின் கடந்த, வல் கடவுளை நகைப்ப
வேட்டலால், விளி விழுங்கிய கயவன் ஆர்?“என்றான். 19

“கை வயத்தினால், கருத்து இடத்து உடலின் ஊங்கு ஓங்கும்
பொய் வயத்தினான் புகைந்த சொற்கு அஞ்சுவது என்னோ?
மெய் வயத்தினால் விழை செயம் ஆவதோ? கடவுள்
செய் வயத்தினால், சிறுவன் நான் வெல்லுவேன் “என்றான். 20

**சவூல் அரசன்வினாவும் தாவீதன்விடையும்**

என்றது அண்ணல் கேட்டு, “இவன்தனைக் கொணர்மின் “என்று இசைப்ப,
சென்ற அன்ன நல் சேடனை நோக்கலும், “நீயோ

பொன்ற உன்னினாய்? பொருப்பினைப் பெயர்த்து எறிந்து, உவமை
வென்ற திண்மையான் வெகுளி முன் நீய் எவன்!" என்றான். 21

ஏந்தல் ஈர் அடி இறைஞ்சிய இளவலும் அறைவான்;
"காய்ந்தது ஓர் பகை கடுத்த தன் பவம் செயின், மீட்டு
வேய்ந்தது ஓர் படை வேண்டுமோ? கடவுளைப் பகைத்து,
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை எவன் வெலான், அய்யா 22

"திறம் கடுத்த கொல் சிங்கமும் உளியமும் பாய்ந்து,
மறம் கடுத்து அதிர் வல்லியத்து இனங்களும் எதிர்ந்து,
கறங்கு அடுத்த கால், கழுத்தினை முருக்கி நான் கொன்றேன்,
அறம் கெடுத்தவன் அவற்றினும் வலியனோ?"என்றான். 23

அரிய ஆண்மையை அதிசயித்து அரசன், "நன்று "என்னா,
விரி அளாவு ஒளி வேலொடு தனது பல் கருவி
உரிய போர் செய ஒருங்கு தந்தனன். "அவற்றொடு "தான்,
"திரிய வாய் முறை தெரிகிலேன் " என மறுத்து அகன்றான். 24

### தாவீதன்போருக்குப்புறப்படுதல்

தெரிந்த வாய்ந்த ஐம் சிலையொடு கவண் எடுத்து, எவரும்
இரிந்த பாலனை நோக்கி உள் அதிசயித்து இரங்க,
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூற,
பிரிந்த கால் ஒலி பெருக ஆங்கு அனைவரும் ஆர்த்தார். 25

### கோலியாற்றின்கோபமொழி

ஆர்த்த ஓதை கேட்டு, அரக்கன்நின்று அமர்க்கு எதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்து எழுந்து, யாவரும் அஞ்சக்
கூர்த்த வேலொடு குறுக வந்து, அகல் கரு முகிலின்
பேர்த்த கோடை நாள் பேர் இடி என உரை செய்தான்: 26

"நீ அடா எதிர் நிற்பதோ? மதம் பொழி கரி மேல்
நாய், அடா, வினை நடத்துமோ? கதம் கொடு நானே
வாய், அடா, பிளந்து உயிர்ப்பு இட மறுகி நீ நுண் தூள்,
ஆய், அடா, உலகு அப் புறத்து ஏகுவாய்!" என்றான். 27

### தாவீதன் மறுமொழி

"வெல் வை வேல் செயும் மிடல் அது உன் மிடல், அடா! நானோ
எல்வை ஆதரவு இயற்று எதிர் இலாத் திறக் கடவுள்
வல் கையோடு உனை மாய்த்து, உடல் புட்கு இரை ஆக
ஒல் செய்வேன் " எனா, உடை கவண் சுழற்றினன் இளையோன். 28

### கோலியாற்றின் வீழ்ச்சி

கல்லை ஏற்றலும், கவணினைச் சுழற்றலும், அக் கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர்; இடிக்கும்

செல்லை ஒத்து அன்ன சிலை நுதல் பாய்தலும், அன்னான்
எல்லை பாய்ந்து இருள் இரிந்து என வீழ்தலும் கண்டார். 29

**இறைவனைப் பழித்த இராக்கதன் தலை**

கடை யுகத்தினில் கரு முகில் உருமொடு விழும் போல்,
படை முகத்தினில் பார் பதைத்து அஞ்ச வீழ்ந்தனன் தன்
புடை அகத்தினில் புணர்ந்த வாள் உருவி, "என் தெய்வம்
உடை உரத்தினை உணர்மின் " என்று இருஞ் சிரம் கொய்தான். 30

கூன் நெடும் பிறை குழைந்த வாய் நிரைநிரை தோன்ற,
ஊன் நெடுந்திரை ஒழுக, ஆங்கு அனைவரும் கூச,
நீல் நெடும் பொறை நிகர் தலை தூக்கினான், ஒன்னார்
மால் நெடும் படை மருண்டு உளைந்து உளம் முறிந்து ஓட. 31

**தாவிதன் அரசனாதல்**

கார் முகத்து அசனி கூசக் கடுத்த அவ் அரக்கன் வென்ற
சீர் முகத்து இளவல், பின்னர் திறத்த தன் நாம வேலால்
போர் முகத்து எதிர் ஒன்று இல்லான், பொழி மறை பழித்த யாரும்
பார் முகத்து அதற்கு எஞ்ஞான்றும் பரிந்திட வகை செய்தானே. 32

கொய்த வாள் முடி திரண்ட குப்பைகள் ஏறி, வெய்யில்
செய்த வாள் முடியைச் சூடி, சிறந்த ஆசனத்தில் ஓங்கி,
பெய்த வான் ஒளியோடு ஆய்ந்த பெருந் தயை பிலிற்றும் செங்கோல்
எய்த வான் இறையோன் ஆண்மை எய்தியே, அரசன் ஆனான். 33

நூல் நகத் துளங்கு, கேள்வி நுண் அறிவாளர்க்கு ஒவ்வா,
வான் அகத்து ஒதுங்கி வாழும் வரும் பொருள் காட்டும் காட்சி,
கான் அகத்து ஒதுங்கி வைகும் கடித் தவத்தோடும் இன்ன
கோன் அகத்து இலங்கி, அங்கண் குடி என வதிந்ததாம் ஆல். 34

----------

## BHARATHIAR UNIVERSITY, COIMBATORE-641 046.

**UNDER GRADUATE DEGREE PROGRAMMES ( CBCS Semester Pattern )**
**(For the students admitted during the academic year 2017 -2018 onwards)**

**பாடத்திட்டம் - நான்காம் பருவம் - பகுதி -I தாள; - IV**

**(2017-2018ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)**

**(செய்யுள், நாடகம், இலக்கிய வரலாறு, இலக்கணம், படைப்பிலக்கியப் பயிற்சி)**

**அலகு - I எட்டுத்தொகை**

1.குறுந்தொகை - 5 பாடல்கள் (3,32,44,49,107,144,194)
2.நற்றிணை - 2 பாடல்கள் (41, 98)
3.அகநானூறு - 2 பாடல்கள் (68,101)
4.கலித்தொகை - 2 பாடல்கள் (20,102)
5.புறநானூறு - 5 பாடல்கள் (101,189,173,191,303)

**அலகு - II**

6.பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப்படை முழுவதும்.

**அலகு - III**

- நாடகம் : காவியத் தலைவி கண்ணகி, ஆசிரியர், ஜெயந்தி நாகராஜன்.
 அறிவு பதிப்பகம், 16(142), ஜானி ஜான்கான் சாலை, சென்னை - 600 014.

**அலகு - IV -** இலக்கிய வரலாறு

1. பொருள் புலப்பாட்டுத்திறன்
 சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
 நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
2. இலக்கணம் - பாடப்பகுதியை ஒட்டிய அகப்புற இலக்கணங்களைப் பொருத்திக் காட்டுதல்.

**அலகு - V - படைப்பிலக்கியப் பயிற்சி**

1. கவிதை, சிறுகதை, நூல் மதிப்பீட்டுப் பயிற்சி
2. ஏதேனும் ஒரு கருவைக் கொடுத்து கதை, கவிதை எழுதச் செய்தல்
3. ஏதேனும் ஒரு நூலினை மதிப்பீடு செய்தல்.

---

**நான்காம் பருவம் - பகுதி I - தாள் - IV**

**வினாத்தாள் அமையும் முறை**

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 75**

**பிரிவு - அ** **10X1=10**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

ஒரு சொல் / தொடரில் விடை தருக.

**பிரிவு - ஆ** **5X5=25**

செய்யுள் - 3 வினாக்கள்

நாடகம் - 2 வினாக்கள்

**பிரிவு - இ** **5X8=40**

செய்யுள் - 2 வினாக்கள்

நாடகம் - 1 வினா

இலக்கிய வரலாறு - 1 வினா

பயிற்சிக்குரியன - 1 வினா (கதை, கவிதை எழுதச் செய்தல், நூல் மதிப்பீடு)

(ஐந்து அலகுகளிலிருந்தும் வினாக்கள் அமையும்)

குறிப்பு : ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் இது அல்லது அது என்ற வகையில், அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல் வேண்டும்.

**-------**

**1.குறுந்தொகை**

1. **குறிஞ்சி - தலைவி கூற்று**

**தலைமகள், சிறைப்புறமாக அவன் வரைந்து கொள்ள வேண்டித் தோழி**

**இயற்பழித்த வழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.**

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே ….. பா.எ:03

**- தேவகுலத்தார்**

**2.குறிஞ்சி - தலைவன் கூற்று**
**தோழியின் கூட்டம் வேண்டி இரந்து பின்னின்ற தலைமகன் கூறியது.**

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலோடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே. பா.எண் : 32

**-அல்லூர் நன்முல்லையார்**

**3. பாலை - செவிலி கூற்று**
**இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது**

காலே பரிதப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற. இவ் உலகத்துப் பிறரே. பா.எண் :44

**-வெள்ளி வீதியார்**

**4.நெய்தல் - தலைவி கூற்று**
**தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் அவனைக் கண்டவழிக் கூறியது**

அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நனி நெஞ்சு நேர்பவளே. பா.எண் :49

**-அம்மூவனார்**

**5. மருதம் - தலைவி கூற்று**
**பொருள் முற்றி வந்த தலைமகனை உடைய கிழத்தி காமம்மிக்க கழிபடர் கிளவியால் கூறியது**

குவியிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாணர்ஊரன் தன்னொடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே. பா.எண் : 107

**- மதுரை கண்ணனார்**

**6. பாலை - செவிலி கூற்று**
**மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது**

கழிய காவி குற்றும் கடல
வெண்டலைப் புணரி யாடியும் நன்றே
பிரிவி லாய முரியதொன் றயர

இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
சென்மழை தவழும் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே. பா.எண்:144

- **கோடன் கொற்றனார்**

**7.முல்லை - தலைவி கூற்று**

**பருவ வரவின்கண் ஆற்றாளாம் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது**

என்னெனப் படுங்கொல் தோழி மின்னுவர
வானோர் பிரங்கும் ஒன்றோ அதனெதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே. பா.எண்:194

- **கோவர்த்தனார்**

**2.நற்றிணை**

**1.பாலை - தோழி கூற்று**

பிரிவு உணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகளைத் தோழி உலகியல் கூறி வற்புறுத்தியது,

பைங் கண் யானை பரூஉ தாள் உதைத்த
வெண் புறக் களரி விடு நீறு ஆடி
சுரன் முதல் வருந்திய வருத்தம் பைபய
பாஅர் மலி சிறு கூவலின் தணியும்
நெடுஞ் சேண் சென்று வருந்துவர் மாதோ
எல்லி வந்த நல் இசை விருந்திற்கு
கிளர் இழை அரிவை நெய் துழந்து அட்ட
விளர் ஊன் அம் புகை எறிந்த நெற்றி
சிறு நுண் பல் வியர் பொறித்த
குறு நடைக் கூட்டம் வேண்டுவோரே . பா.எண்:41

- **இளந்தேவனார்**

**2.குறிஞ்சி - தோழி கூற்று**

இரவுக்குறி வந்து ஒழுகும் தலைவனைத் தோழி வரைவு கடாயது

எய்ம் முள் அன்ன பரூஉ மயிர்எருத்தின்
செய்ய்ம்ம் மேவல் சிறு கட் பன்றி
ஓங்கு மலை வியன் புனம் படீஇயர் வீங்கு பொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்லமெல்லப் பிறக்கே பெயர்ந்து தன்
கல் அளைப் பள்ளி வதியும் நாடன்
எந்தை ஓம்பும் கடியுடை வியல் நகர்த்
துஞ்சாக் காவலர் இகழ் பதம் நோக்கி
இரவின் வரூஉம் அதனினும் கொடிதே
வைகலும் பொருந்தல் ஒல்லாக்.
கண்ணொடு வாராஎன் நார்இல் நெஞ்சே.. . பா.எண்:98

**உக்கிரப்பெருவழுதி**

**3.அகநானூறு**

**குறிஞ்சி - தோழி கூற்று**

**தலைமகன் இரவுக்குறி வந்தமை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.**

அன்னாய்! வாழி வேண்டு அன்னை!

நம் படப்பைத்தணஅயத்து அமன்ற கூதளம் குழைய,
இன்இசை அருவிப் பாடும் என்னதூஉம்
கேட்டியோ? வாழி, வேண்டு அன்னை! நம் படப்பை
ஊட்டி யன்ன ஒண்தளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல், பாம்புஎன,
முழுமுதல் துமிய உரும்எறிந் தன்றே;
பின்னும் கேட்டியோ?' எனவும், அஃது அறியாள்,
அன்னையும் கனைதுயில் மடிந்தனள்; அதன்தலை
மன்உயிர் மடிந்தன்றால் பொழுதே ; காதலர் .
வருவர் ஆயின், பருவம்இது' எனச்
சுடர்ந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதுஅன் றாக,
வந்தனர் - வாழி, தோழி!- அந்தரத்து
இமிழ்பெயல் தலைஇய இனப்பல் கொண்மூத்
தவிர்வுஇல் வெள்ளம் தலைத்தலை சிறப்பக்
கன்றுகால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்தலை மடப்பிடிப் பூசல் பலஉடன்
வெண்கோட்டு யானை விளிபடத் துழவும்
அகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடு சுரனே . பா.எண்:68

**-ஊட்டியார்**

**பாலை**

**பிரிவிடை வேறுபட்ட கிழத்தி, தோழிக்குச் சொல்லியது, தோழி கிழத்திக்குச் சொல்லியதூம்உம் ஆம்.**

அம்ம வாழி தோழி! இம்மைநன்றுசெய் மருங்கில் தீதுஇல்' என்னும்
தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல்?-
தகர்மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவல்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி,
நுரைதெரி மத்தம் கொளீஇ, நிரைப் புறத்து,
அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்,
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்,
இனம்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்டு,
அகல் இரு விசும்பிற்கு ஓடம் போலப்,
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்று
உருப்பு அவிர்பு ஊரிய சுழன்றுவரு கோடைப்
புன்கான் முருங்கை ஊழ்கழி பன்மலர்,
தண்கார் ஆலியின், தாவன உதிரும்,
பனிபடு பன்மலை இறந்தோர்க்கு,
முனிதகு பண்புயாம் செய்தன்றோ இலமே! பா.எண்:101

**- மாமூலனார்**

## 4. கலித்தொகை

**பாலைக்கலி**

பல் வளம் பகர்பு ஊட்டும் பயன் நிலம் பைது
அறச்செல் கதிர் ஞாயிறு செயிர் சினம் சொரிதலின்,
தணிவு இல் வெம் கோடைக்குத் தண் நயந்து அணி கொள்ளும்
பிணி தெறல் உயக்கத்த பெருங் களிற்று இனம் தாங்கும்
மணி திகழ் விறல் மலை வெம்ப மண் பகத்,

துணி கயம் துகள் பட்ட தூங்கு அழல் வெஞ்சுரம்-
'கிளி புரை கிளவியாய்! நின் -அடிக்கு எளியவோ,
தளி உறுபு அறியாவே, காடு!' எனக் கூறுவீர்!
வளியினும் வரை நில்லா வாழு நாள், நும் ஆகத்து
அளி என உடையேன் யான்; அவலம் கொண்டு அழிவலோ?
'ஊறு நீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய்! நீ உணல் வேட்பின்,
ஆறு நீர் இல' என, அறன் நோக்கிக் கூறுவீர்!
யாறு நீர், கழிந்தன்ன இளமை, நும் நெஞ்சு என்னும்
தேறு நீர், உடையேன் யான், தெருமந்து ஈங்கு ஒழிவலோ?
'மாண் எழில் வேய் வென்ற தோளாய்! நீ வரின், தாங்கும்
மாண் நிழல் இல ஆண்டை மரம்' எனக் கூறுவீர்!
நீள் நிழல் தளிர் போல நிறன் ஊழ்த்தல் அறிவேன்; நும்
தாள் நிழல் கைவிட்டு யான் தவிர்தலைச் சூழ்வலே?
என ஆங்கு,
'அணை அரு வெம்மைய காடு' எனக் கூறுவீர்;
கணை கழிகல்லாத கல் பிறங்கு ஆர் இடைப்
பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ? பிரியுமோ, அவையே? பா.எண்:20

## முல்லைக்கலி

கண் அகல் இரு விசும்பில் கதழ் பெயல் கலந்து
ஏற்றதண் நறு பிடவமும், தவழ் கொடித் தளவமும்,
வண்ண வண் தோன்றியும், வயங்கு இணர்க் கொன்றையும்,
அன்னவை பிறவும், பல் மலர் துதையத்
தழையும் கோதையும் இழையும் என்று இவை
தைஇயினர், மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மட மொழி ஆயத்தவருள் இவள் யார்- உடம்போடு
என் உயிர் புக்கவள், இன்று?
ஓஒ! இவள், 'பொரு புகல் நல் ஏறு கொள்பவர் அல்லால்,
திரு மா மெய் தீண்டலர்' என்று கருமமா,
எல்லாரும் கேட்ப அறைந்து, எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள்.
'சொல்லுக, பாணியேம்' என்றார்; 'அறைக' என்றார்; பாரித்தார்.
மாண் இழை ஆறு ஆகச் சாறு.
சாற்றுள், பெடை அன்னார் கண் பூத்து, நோக்கும் வாய் எல்லாம்
மிடை பெறின், நேராத் தகைத்து.
தகை வகை மிசை மிசைப் பாயியர் ஆர்த்து, உடன்
எதிர் எதிர் சென்றார் பலர்.
கொலை மலி சிலை செறி செயிர் அயர் சினம் சிறந்து,
உருத்து எழுந்து ஓடின்று மேல்.
எழுந்தது துகள்;
ஏற்றனர் மார்பு;
கவிழ்ந்தன மருப்பு;
கலங்கினர் பலர்.
அவருள், மலர்மலி புகல்எழ அலர்மலி மணிபுரை நிமிர்தோள் பிணைஇ
எருத்தோடு இமில் இடைத் தோன்றினன், தோன்றி,
வருத்தினான் மன்ற, அவ் ஏறு.
ஏறு எவ்வம் காணா எழுந்தார்- எவன் கொலோ-
ஏறு உடை நல்லார்; பகை?
மடவரே நல் ஆயர் மக்கள்- நெருநை,

அடல் ஏற்று எருத்து இறுத்தார்க் கண்டும், மற்று இன்றும்,
உடல் ஏறு கோள் சாற்றுவார்!
ஆங்கு இனித்;
தண்ணுமைப் பாணி தளராது எழூஉக-
பண் அமை இன் சீர் குரவையுள், தெள் கண்ணித்
திண் தோள், திறல் ஒளி, மாயப் போர், மா மேனி,
அம் துவர் ஆடைப் பொதுவனோடு, ஆய்ந்த
முறுவலாள் மென் தோள் பாராட்டிச், சிறுகுடி
மன்றம் பரந்தது, உரை பா.எண்:102

----------------

## 5. புறநானூறு

### பாடல்-1

பாடியவர்: ஔவையார்,
பாடப்பட்டோன்: அதியமான் நெடுமான் அஞ்சி.
திணை: பாடாண். துறை: பரிசில் கடா நிலை.

ஒருநாள் செல்லலம்; இருநாட் செல்லலம்;
பன்னாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் பொன்ற விருப்பினன் மாதோ;
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான்; பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும், நீட்டா தாயினும், யானைதன்'
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது; பொய்யா காதே;
அருந்தே மாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டா; வாழ்க, அவன் தாளே! பா.எண்:101

### பாடல்-2

பாடியவர்: சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்.
பாடப்பட்டோன்: சிறுகுடி கிழான் பண்ணன்.
திணை: பாடாண். துறை: இயன்மொழி.

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர் ! காண்க, இவன் கடும்பினது இடும்பை;
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊணொலி அரவந் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்,
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்; கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்;
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே, பா.எண்:173

### பாடல் -3.

பாடியவர்: மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
திணை: பொதுவியல் துறை: பொருண்மொழிக் காஞ்சி
(செல்வத்துப் பயனே ஈதலென்பதை வலியுறுத்தும் செய்யுள் இது.)

தெண்கடல் வளாகம் பொதுமை 'இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி ; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் குமே;
அதனால், செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே பா.எண்:189

பாடல் 4.

பாடியவர்: பிசிராந்தையர்
திணை: பொதுவியல் துறை: பொருண்மொழிக் காஞ்சி

'யாண்டுபல வாக , நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்?' என வினவுதிர் ஆயின்,
மாண்டஎன் மனைவியோடு, மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்க; அதன்தலை
ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே! பா.எண்:191

பாடல் 5.

பாடியவர்: எருமை வெளியனார்
திணை: தும்பை துறை : குதிரை மறம்

நிலம்பிறக் கிடுவது போலக் குளம்பு குடையூஉ
உள்ளம் அழிக்கும் கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செகுக்கும் காளை கூர்த்த
வெந்திறல் எ·கம் நெஞ்சுவடு விளைப்ப
ஆட்டிக் காணிய வருமே; நெருநை,
உரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்,
கரைபொரு முந்நீர்த் திமிலின் போழ்ந்து, அவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப,
இலங்கு மருப்பு யானை எறிந்த எற்கே. பா.எண்:303

------

**6.பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுபடை**

**பாடியவர்: இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்**
**பாடப்பட்டவன்: ஓய்மானாட்டு நல்லியக்கோடன்**
**திணை: பாடாண்திணை , துறை: ஆற்றுப்படை, பாவகை: ஆசிரியப்பா**
**மொத்த அடிகள்:** 269

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கற
லயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்

காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்

பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
யைதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅ
யுயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய அடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென

மால்வரை யழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி ஓதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கி
னின்சே றிகுதரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்

மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி
னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல

கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவண்
வருபுனல்வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று

நறவுவா யுறைக்கும் நாகுமுதிர் நுணவத்
தறைவாய்த் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி

நோன்பகட் டுமண ரொழுகையடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கும் நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற

கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனைமறுகின் மதுரையும் வறிதே யுதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்

கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
யேம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா இருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்

தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல்

பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வாலுளைப் புரவியடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ

ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி

யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலுமொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகக்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியடு மலைந்த

வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடைய நோன்றா
ணறுவீ நாககு மகிலு மாரமுந்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்

மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயல்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாள் சென்றன மாக விந்நா
டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாக் பால்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
யல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திருக்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு
மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்

டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருதும் நீயிரு
மிவணயந் திருந்த விரும்பே ரொக்கற்

செம்ம லூள்ளமொடு செல்குவி ராயி
னலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனியம் மருட்டவுங்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்

பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர்ப் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் படரி
னோங்குநிலை யட்டகந் துயுன்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோண்
மதியேக் கறூஉம் மாசறு திருமுகத்து
நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்

தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
யறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயி லவிழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்

சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தி
னுறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
யெயிற்றிய ரட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து

புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத் தோன்று
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தண ரருகா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கினவ னாமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை

பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையடு பெறுகுவி
ரெரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப . . . .

நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய னாதலுஞ்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையு . . .

மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு மோடிய துணர்தலு
மரியே ருண்க ணரிவைய ரேத்த
அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப் . . . .

பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
வங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானாது . . . .

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு
மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்

பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்

பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்த்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
யானா விருப்பிற் றனின் றூட்டித்
திறல்சால் வென்றியடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி

யுருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
வுள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ

யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றேட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

**----முற்றிற்று-----**